## அல்லாஹ்வின் கட்டளை

اَيَّامًا مَّعْدُوْدٰتٍ ؕ فَمَنْ كَانَ مِنْكُمْ مَّرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ؕ وَعَلَى الَّذِيْنَ يُطِيْقُوْنَهٗ فِدْيَةٌ طَعَامُ مِسْكِيْنٍ ؕ فَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَهُوَ خَيْرٌ لَّهٗ ؕ وَاَنْ تَصُوْمُوْا خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ

(எனவே) கணிக்கப்பட்ட நாள்களில் (நோன்பு நோற்றுக் கொள்க). உங்களுள் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் (விடுபட்ட நோன்பை) மற்ற நாள்களில் நோற்க வேண்டும். இதற்குரிய ஆற்றலைப் பெறாதவர்கள் பரிகாரமாக ஓர் ஏழைக்கு உணவளிப்பது கடமை ஆகும். ஒருவர் முழுமையாகக் கட்டுப்பட்டு ஒரு நற்செயல் செய்வார் எனில், அது அவருக்கு நன்றே. நீங்கள் அறிவுடையவர் என்றால், நோன்பு நோற்பது உங்களுக்குச் சிறந்தது. (2:185)

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 7

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

இதழ் 14

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

05 ரமலான் 1443 ஹிஜ்ரி கமரி 07 ஷஹாதத் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி 07 ஏப்ரல் 2022


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## எந்தப் பணியாக இருந்தாலும், எந்தக் கூற்றாக இருந்தாலும் அது அல்லாஹ்விற்காக இருக்க வேண்டும் என்பதையே எனது இயல்பு எதிர்பார்க்கின்றது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

அனைத்து சகோதரர்களும் கவனமாக கேளுங்கள். வெளிப்படையான சொற்பொழிவுகளில் நடைபெறும் வெறும் வார்த்தைகளை மட்டுமே விரும்பக் கூடாது என்பதை நான் எனது ஜமாஅத்திற்காகவும், எனது நஃப்ஸிற்காகவும் விரும்புகின்றேன். சொற்பொழிவாளர் எவ்வளவு அற்புதமாக சொற்பொழிவாற்றுகிறார்? சொற்கள் எவ்வளவு அழுத்தம் வாய்ந்தவையாக உள்ளன! என்பதில் வந்து அனைத்து நோக்கங்களும் நின்று விடக் கூடாது. நான் இந்த விஷயத்தில் திருப்தி கொள்வதில்லை. இன்னும் கூறப்போனால், செயற்கையான மற்றும் அலங்காரமான விஷயங்கள் இருத்தல் கூடாது என்பதையே நான் விரும்புகின்றேன். இன்னும் கூறப்போனால் எந்த பணியாக இருந்தாலும், எந்த கூற்றாக இருந்தாலும் அது அல்லாஹ்விற்காக இருக்க வேண்டும் என்பதையே எனது இயல்பு எதிர்பார்க்கின்றது. அல்லாஹ்வின் திருப்தியும், அவனது கட்டளைகளின்படி செயல்படுவதுமே நோக்கமாக இருக்க வேண்டும். எனது நோக்கத்தை இறைவன் நன்கு அறிகின்றான். அதாவது நான் சொற்பொழிவாற்றுவதும், அறிவுரைகள் செய்வதும் ஒரு பக்கம் இருக்கட்டும். நான் எப்போதும், எப்போதும் தனிமையையே விரும்புகின்றேன். தனிமையில் எப்படிப்பட்ட இன்பத்தை பெறுகின்றேன் என்றால் அதனை என்னால் விவரிக்க முடியாது. ஆனால் நான் என்ன செய்வது? மனித இனத்தின் மீதான அனுதாபம் என்னை ஈர்த்துக் கொண்டு வெளியே கொண்டு வருகின்றது. மேலும் அது அல்லாஹ்வின் கட்டளையாகும். அவன் என்னை தப்லீக் செய்வதற்காக நியமித்துள்ளான். ஒவ்வொரு நன்மையிலும் ஷய்த்தான் தனது பகுதியை வைத்திருக்கின்றான். எனவே தான் வெறும் வார்த்தைகளை மட்டுமே விரும்ப வேண்டாம் என்று நான் கூறியுள்ளேன். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 360 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## திருக்குர்ஆனை முழு உலகம் வரை கொண்டு சேர்ப்பது அவசியமாகும். ஏனென்றால் அது முழு உலகத்திற்காகவும் இறங்கியுள்ளது. அது முழு உலகத்தின் செல்வமாகும்

بِالْبَيِّنٰتِ وَالزُّبُرِ ؕ وَاَنْزَلْنَآ اِلَيْكَ الذِّكْرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ اِلَيْهِمْ وَلَعَلَّهُمْ يَتَفَكَّرُوْنَ (16:44)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

لِتُبَيِّنَ என்ற சொல்லில் வந்துள்ள லாம் இலக்கண ரீதியில் லாமே தஃலீலாகவும் இருக்கக் கூடும். லாமே ஆகிபத்தாகவும் இருக்கக் கூடும். லாமே தஃலீல் என்ற நிலையில் இந்த வசனத்தின் பொருள் இவ்வாறு அமையும். அதாவது நாம் உம் மீது மற்ற வேதங்களை விட உயர்ந்த சிறப்புகளைக் கொண்ட வேதத்தை இறக்கியுள்ளோம். நீர் முழு உலகிற்கும் அதன் போதனையை எடுத்துரைக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்துள்ளோம். அதாவது உம் மீது இறங்கியுள்ள வேதம் மற்ற அனைத்தையும் விட உயர்ந்ததாக இருப்பதற்குரிய காரணம் என்னவென்றால், அல்லாஹ் அதனை ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அல்லது ஒரு காலத்தின் மக்களுக்காக மட்டும் இறக்கவில்லை. மாறாக அனைத்து மக்களுக்காகவும் இறக்கியுள்ளான். அந்த மக்கள் எந்தவொரு சமுதாயத்தைச் சார்ந்தவராகவோ அல்லது எந்த காலகட்டத்தை சார்ந்தவர்களாகவும் இருக்கலாம்.

லாமே ஆகிபத் என்ற நிலையில் வசனத்தின் பொருள் இவ்வாறு அமையும். உம் மீது ஓர் உயர்வான வேதம் இறங்கியுள்ளது. அவ்வாறிருக்க நீர் அதனை மறைவாக எப்படி வைக்க முடியும்? நீர் முழு உலகையும் அதன் பக்கம் அழைக்கின்றீர். அதன் விளைவாகவே உயர்ந்த வேதம் இறங்கியுள்ளது. எனவே அதுபோன்ற வேதம் எந்த நபர் மீது இறங்கியுள்ளதோ அவர் மௌனமாக எப்படி இருக்க முடியும்? نُزِّلَ اِلَيْهِمْ என்று கூறி நிராகரிப்பாளர்களின் அன்பின் உணர்வுகள் தூண்டப்பட்டுள்ளது. அதாவது வேதம் உம் மீது இறங்கியுள்ளது என்றாலும் அதன் நோக்கம் இந்த வேதத்திலிருந்து முழு உலகமும் பயன் பெற வேண்டும் என்பதாகும். எனவே உண்மையில் இந்த வேதம் முழு உலகத்தின் மீதே இறங்கியுள்ளது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 172 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

1897: ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒருவர் இறைவழியில் ஒரு ஜோடிப் பொருட்களைச் செலவு செய்தால் அவர் சுவர்க்கத்தின் வாசல்களிலிருந்து, அல்லாஹ்வின் அடியாரே! இ(ந்த வாசல்)து சிறந்தாகும்! என்று அழைக்கப்டுகிறார். (தம் உலக வாழ்வின் போது) தொழுகையாளிகளாய் இருந்தவர்கள் தொழுகையின் வாசல் வழியாக அழைக்கப்படுவர். அறப்போர் புரிந்தவர்கள் ஜிஹாது எனும் வாசல் வழியாக அழைக்கப்படுவர். நோன்பாளிகளாய் இருந்தவர்கள் ரய்யான் எனும் வாசல் வழியாக அழைக்கப்படுவர் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் (அதனைக்கேட்டுவிட்டு) இறைத்தூதர் (ஸல்) அவர்களே! என் தாயும் தந்தையும் தங்கள் மீது அர்ப்பணம். எவர் இந்த அனைத்து வாசல்கள் வழியாகவும் அழைக்கப்படும் ஒருவருக்கு எந்தத் தேவையும் இருக்காதல்லவா?

(எனவே ஹுஸூர் கூறுங்கள்) இந்த அனைத்து வாசல்கள் வழியாகவும் ஒருவர் அழைக்கப்படுவாரா? என்று கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம்! நீங்களும் அவர்களில் ஒருவராக இருப்பீர்கள் என நான் நம்புகிறேன் என்று கூறினார்கள்.

(சஹீஹ் புகாரி தொகுதி 3, பாடம் நோன்பு – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை 25 பிப்ரவரி & 04 மார்ச் 2022*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 04 மார்ச் 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு தப்லீக் மாதம் **04 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து எடுத்துரைக்கப்பட்டு வந்தது. அதுபற்றி தாரீகே தபரி எனும் நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அந்த சந்தர்ப்பத்தில், குபாப் பின் முன்ஸிர் (ரலி) எழுந்து நின்று அன்ஸார் கூட்டத்தினரே! நீங்கள் இந்த விவகாரத்தின் அதிகாரத்தை உங்களின் கையில் வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் தற்போது இந்த மக்கள் அதாவது முஹாஜிர்கள் உங்களின் நிழலின் கீழ் இருக்கின்றார்கள். எவருக்கும் உங்களை எதிர்ப்பதற்கு தைரியம் இருக்காது. உங்களின் கருத்திற்கு எதிராக மக்கள் செல்ல மாட்டார்கள். நீங்கள் கண்ணியத்திற்குரியவர்களாகவும், செல்வந்தர்களாகவும், எண்ணிக்கையில் மிகுதியானவர்களாகவும், ஆற்றல் மற்றும் வலிமை கொண்டவர்களாகவும், அனுபவம் வாய்ந்தவர்களாகவும், போர் வீரர்களாகவும், தைரியமிக்கவர்களாகவும் இருக்கின்றீர்கள். நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? என்பதை மக்கள் உங்களை நோக்கி பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள். உங்களின் கருத்தால் உங்களுக்குள் குழப்பமும் ஏற்படாது. உங்களின் விவகாரம் உங்கள் மீதே திரும்பி விடாது. எனவே இந்த மக்கள் அதாவது குரைஷிய முஹாஜிர்கள் இந்த விஷயத்தை நிராகரித்தால் அதாவது எங்களில் ஒருவர் அமீராக இருப்பார். அவர்களில் ஒருவர் அமீராக இருப்பார் என்று நீங்கள் செவியுற்ற இந்த விஷயத்தை அவர்கள் நிராகரித்தால்.

அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இது சாத்தியமற்ற ஒன்றாகும். இரண்டு வாள்கள் ஓர் உறையில் இருக்க முடியாது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் உங்களை அமீராக்குவதை அரபு கோத்திரங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதாவது அவர்களின் நபி உங்களை அன்றி வேறொரு கோத்திரத்தை சார்ந்தவராக இருக்கும்போது உங்களை அமீராக்குவதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆயினும் நபித்துவ விவகாரம் எவர்களிடம் இருந்ததோ அவர்களிடம் இந்த விஷயத்தை ஒப்படைப்பதை அரேபியர்கள் ஒப்புக் கொள்வதற்கு எந்தத் தடையும் இருக்காது. அவர்களில் இருந்தே அவர்களின் அமீர் இருக்க வேண்டும். இந்த வடிவில் அரேபியர்களில் ஒருவர் அவர்களின் அமீராக இருப்பதை ஒருவர் நிராகரித்தால் பின்னர் அவர்களை எதிர்கொள்வதற்கு நம்மிடம் தெளிவான சான்றும், உண்மையும் இருக்கும். முஹம்மது (ஸல்) அவர்களின் அரசாங்கம் மற்றும் அமாரத் குறித்து எவர் நம்மை எதிர்ப்பார். நாங்களே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நண்பரும், குடும்பத்தினரும் ஆவோம். முட்டாள்கள் அல்லது பாவம் செய்தவர்கள் அல்லது தங்களைத் தாங்களே அழிவில் போட்டுக் கொள்ளக் கூடியவர்களைத் தவிர வேறு எவரும் இந்த ஆலோசனையை எதிர்க்க மாட்டார்.

குபாப் பின் முஸ்லிர் (ரலி) கூறினார்: அன்ஸார் கூட்டத்தினரே! நீங்கள் இந்த விவகாரத்தை சுயமே தீர்த்துக் கொள்ளுங்கள். ஒருபோதும் இந்த நபரின் கூற்றையும், அவரது தோழர்களின் கூற்றையும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். உங்களின் பங்கில் இதை சேர்ப்பதற்கு விரும்புகின்றனர். ஒருவேளை இவர்கள் நமது ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் பின்னர் அவர்கள் அனைவரையும் நமது பகுதிகளிலிருந்து வெளியேற்றி விடுங்கள். மேலும் அனைத்து விவகாரங்களின் கட்டுப்பாட்டையும் உங்களின் கையில் எடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் இறைவன் மீது ஆணையாக! இந்த அமாரத் (தலைமை) பதவிக்கு எல்லாரையும் விட நீங்களே மிக அதிக தகுதி படைத்தவர்களாகவும், பொருத்தமானவர்களாகவும் உள்ளீர்கள். ஒருபோதும் கட்டுப்படாதவர்களையும் கூட, உங்களின் வாள்கள் இந்த மார்க்கத்திற்கு கட்டுப்படுபவர்களாக ஆக்கி விட்டது. நான் இந்த அனைத்து நடவடிக்கைகளின் தீர்வின் பொறுப்பையும் எனது தலை மேல் ஏற்றுக் கொள்கின்றேன். ஏனென்றால் நான் இதற்கு முழுமையான அனுபவம் படைத்துள்ளேன். மேலும் அதற்கு தகுதியும் பெற்றுள்ளேன். இறைவன் மீது ஆணையாக! நீங்கள் விரும்பினால் நான் விசாரித்து இதற்கு முடிவெடுக்கின்றேன்.

அப்போது நீங்கள் அவ்வாறு செய்தால் பின்னர் அல்லாஹ் உங்களை அழித்து விடுவான் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார்கள். அதற்கு அன்னார் அதாவது குபாப் (ரலி), நீங்கள் அழிக்கப்படுவீர்கள் என்று கூறினார். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அன்ஸார் கூட்டத்தினரே! நீங்கள் யாரென்றால் மார்க்கத்திற்கு எல்லாரையும் விட முதன் முதலில் ஒத்தாசையும், உதவியும் செய்துள்ளீர்கள். அவ்வாறிருக்க அதில் மாற்றங்களை நீங்களே முதன் முதலில் செய்பவர்களாக ஆகி விடக் கூடாது. அப்போது பஷீர் பின் சஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அன்ஸார் கூட்டத்தினரே! இஸ்லாமிய மார்க்கத்தின் ஆரம்பத்தில் தொண்டுகள் செய்வதற்கும், இணை வைப்பவர்களுடன் ஜிஹாத் செய்வதற்கும் நமக்கு நற்பேறு கிடைத்தது. அதில் நமது இறைவனின் திருப்தியை பெறுவதும், நமது நபி (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவதும் மட்டுமே நமது நோக்கமாக இருந்தது. எனவே மற்றவர்கள் மீது நமது மேன்மையை சுட்டிக் காட்டுவது நமக்கு உகந்ததல்ல. மேலும் நாம் அதன் மூலம் உலகிலிருந்து எந்த பயனையும் விரும்பவில்லை. இந்த விவகாரத்தில் நம் மீது அல்லாஹ்வின் கருணையே உள்ளது.

கேட்டுக் கொள்ளுங்கள்! நிச்சயமாக முஹம்மது (ஸல்) அவர்கள் குரைஷியர்களைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். எனவே அவர்களின் சமுதாயமே இந்த தலைமை பதவிக்கு அதிக தகுதி படைத்ததாகவும், உரிமை படைத்ததாகவும் உள்ளது. நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். இந்த விவகாரத்தில் நான் அவர்களுடன் ஒருபோதும் சண்டையிட மாட்டேன். அல்லாஹ்விற்கு அஞ்சுங்கள். அவர்களை எதிர்க்காதீர்கள். மேலும் இந்த விவகாரத்தில் அவர்களுடன் சண்டையிடாதீர்கள்.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 5243 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு பற்றிய அந்த அறிவிப்பு சுனன் கிப்ரா லின்னிஸாயி என்ற மற்றொரு நூலில் இவ்வாறு வருகின்றது: அதாவது எங்களில் ஓர் அமீர் இருப்பார். உங்களில் ஓர் அமீர் இருப்பார் என்று சகீஃபா பனூ ஸாயிதாவில் அன்ஸார் சகோதரர்கள் கூறியபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று, ஓர் உறையில் இரண்டு வாள்கள் இருக்க முடியாது. அவ்வாறிருப்பது சரியாக இருக்காது என்று கூறினார்கள். மேலும் அன்னார் அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் கரங்களை பற்றினார்கள். மேலும் இந்த மூன்று சிறப்புகள் யாரிடம் இருக்கின்றன என்று கேட்டார்கள்.

اِذْ يَقُوْلُ لِصَاحِبِهٖ لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا

பொருள்: அதாவது அவர் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமது தோழரிடம், கவலைப்பட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். அந்த தோழர் யாராக இருந்தார்?

பின்னர் اِذْ هُمَا فِى الْغَارِ என்று கூறினார்கள். பொருள்: அவர்கள் இருவரும் குகையில் இருந்தார்கள். அந்த இருவர் யாராக இருந்தார்கள்?

அடுத்து அன்னார் அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا என்று கூறினார்கள். அதாவது கவலைப்பட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைத் தவிர்த்து யாருடன்

இருந்தார்கள்? அல்லது அன்னாருடன் யார் இருந்தார்? இதனை கூறியவாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள். பின்னர் நீங்களும் பைஅத் செய்து விடுங்கள் என்று மக்களிடம் கூறினார்கள். எனவே மக்கள் பைஅத் செய்து விட்டனர்.

(சுனன் திர்மிதி, கிதாப் வஃபாத் நபி (ஸல்) ஹதீஸ் எண் 7119 தொகுதி 4 பக்கம் 264 – 1991 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூஉபைதா பின் ஜர்ராஹ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் பஷீர் பின் சஅத் (ரலி) ஆகியோர் பைஅத் செய்தனர். இவ்வாறு அனைத்து அன்ஸார் சஹாபிகளும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டனர்.

(அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 2 பக்கம் 193 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த பைஅத் இஸ்லாமிய புத்தகங்களில் பைஅத்தே சகீஃபா மற்றும் பைஅத்தே காஸா என்ற பெயராலும் பிரபல்யமாகி உள்ளது.

(தாரீகுல் குலஃபாபே ராஷிதீன் பக்கம் 22, 367 – 2011 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருன் நஃபாயிஸில் அச்சிடப்பட்டது)

சில அறிவிப்புகளில் இந்த குறிப்பும் கிடைக்கின்றது. அதாவது ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்திருக்கவில்லை. அதே நேரம் அன்னாரும் ஏனைய அன்ஸார் சஹாபிகளுடன் சேர்ந்து பைஅத் செய்திருந்தார்கள் என்றும் வேறு சில அறிவிப்புகளிலிருந்து தெரிய வருகின்றது.

எனவே தாரீகே தபரி எனும் நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது முழு சமுதாயமும் தனித்தனியாக ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டது. ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களும் பைஅத் செய்து விட்டார்கள்.

(தாரீக் தபரி தொகுதி 3 பக்கம் 266 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நிலைபெற்ற கிலாஃபத்தைக் குறித்து குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு கிலாஃபத் தோன்றியது! எவ்வளவு மகத்தான முறையில் தோன்றியது என்று பாருங்கள். அன்னார் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனார்கள். அந்த நேரத்தில் தங்களிலிருந்து ஒரு கலீஃபாவும், முஹாஜிர்களிலிருந்து ஒரு கலீஃபாவும் இருக்க வேண்டும் என அன்ஸார் சஹாபிகள் விரும்பினர். அதை செவியுற்ற உடனே ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் மேலும் சில சஹாபிகள் அன்ஸார் சஹாபிகள் ஒன்றுகூடியிருந்த அந்த இடத்திற்கு சென்று விட்டார்கள். மேலும் அவர்களிடம், பாருங்கள்! இரண்டு கலீஃபா இருக்க வேண்டும் என்ற விஷயம் தவறானதாகும் என்று கூறினார்கள். பிரிவினையால் இஸ்லாம் முன்னேற்றம் அடையாது. எந்நிலையிலும் கலீஃபா ஒருவராகவே இருப்பார். நீங்கள் பிரிவினையை உண்டாக்கினால் பின்னர் உங்களது ஒற்றுமை சிதறுண்டு விடும். உங்களது கண்ணியம் முடிந்து விடும். அரேபியர்கள் ஒரு எலும்புத் துண்டைப் போன்று உங்களை வீசி விடுவார்கள். நீங்கள் இந்த விஷயத்தை பேசாதீர்கள். சில அன்ஸார் சஹாபிகள் அன்னார் (ரலி) அவர்களுக்கு முன்னால் சான்றுகளை முன் வைக்க தொடங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு பேசத் தெரியாது. எனவே நான் அன்ஸார் சஹாபிகளுக்கு முன்னால் பேசுவேன் என்று நான் எண்ணி இருந்தேன். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் சொற்பொழிவை கேட்டேன். அப்போது எனது எண்ணங்களில் இருந்த அனைத்து சான்றுகளையும் அன்னார் (ரலி) எடுத்துரைத்தார்கள். எனது எண்ணங்களில் இருந்த அனைத்து சான்றுகள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். பின்னர் அதை விடவும் அதிகமான சான்றுகளை அன்னார் (ரலி) எடுத்துரைத்தார்கள்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் இதைப் பார்த்த பிறகு இன்று இந்த முதியவர் என்னை விட முன்னேறி விட்டார் என்று எனது உள்ளத்தில் கூறினேன். இறுதியில் அல்லாஹ் எவ்வாறு அருள் செய்தான் என்றால் அன்ஸார் சஹாபிகளில் இருந்தே சில மக்கள் சுயமே எழுந்து நின்றார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கூறும் விஷயங்கள் எல்லாம் உண்மையாகும். அது சரிதான் என்று சிலர் கூறத் தொடங்கி விட்டனர். மக்கா வாசிகளைத் தவிர்த்து வேறு எவருக்கும் அரேபியர்கள் கட்டுப்பட மாட்டார்கள் என்று கூறினார்கள்.

பின்னர் ஓர் அன்ஸாரி சஹாபி மிகவும் உணர்வுப்பூர்வமாக இவ்வாறு கூறினார்: எனது சமுதாயமே! அல்லாஹ் இந்த நாட்டில் தனது ஒரு தூதரை அனுப்பினான். அந்த நபியின் உறவினர்கள் அவரை தமது நகரத்திலிருந்து வெளியேற்றி விட்டனர். அப்போது நாம் நமது வீடுகளில் அவருக்கு இடமளித்தோம். அல்லாஹ் அதற்கு பகரமாக நமக்கு கண்ணியம் வழங்கினான். மேலும் நாமோ ஒன்றும் அறியாத மதீனாவாசிகளாக இருந்தோம். இழிவானவர்களாக இருந்தோம். ஆனால் அந்த தூதரின் காரணமாக நாம் கண்ணியத்திற்குரியவர்களாகவும், பிரபலமானவர்களாகவும் ஆகி விட்டோம். எந்த விஷயம் நம்மை கண்ணியத்திற்குரியதாக ஆக்கியதோ அதனை தற்போது நீங்கள் போதுமானதாக கருதுங்கள். அதிகமாக பேராசை கொள்ளாதீர்கள். இல்லையென்றால் அதன் காரணமாக நமக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படக் கூடும். அந்த நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கூறினார்கள்: பாருங்கள்! கிலாஃபத்தை நிலைநாட்டுவது அவசியமாகும். மற்றபடி நீங்கள் யாரை விரும்புகின்றீர்களோ அவரை கலீஃபாவாக ஆக்கிக் கொள்ளுங்கள். கலீஃபா ஆகுவதற்கு எனக்கு எந்த ஆசையும் இல்லை.

மேலும் அன்னார் (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்: பாருங்கள்! இவர் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) ஆவார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு அமீனுல் உம்மத் அதாவது இந்த சமுதாயத்தின் நம்பிக்கைக்குரியவர் என்ற பட்டத்தை வழங்கியுள்ளார்கள். நீங்கள் அவரிடம் பைஅத் செய்து கொள்ளுங்கள். அடுத்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இருக்கின்றார்கள். அன்னார் (ரலி) இஸ்லாத்தின் ஒரு திறந்த வாள் ஆவார்கள். நீங்கள் அவரிடம் பைஅத் செய்து கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார்கள்: அபூபக்ர் (ரலி) அவர்களே! தற்போது பேச்சுக்களை நிறுத்துங்கள். கையை நீட்டுங்கள். எங்களிடம் பைஅத் வாங்குங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் உள்ளத்திலும் அல்லாஹ் தைரியத்தை உருவாக்கி இருந்தான். மேலும் அன்னார் (ரலி) பைஅத் வாங்கிக் கொண்டார்கள்.

(மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மர்கஸிய்யா கே ஸாலானா இஜ்திமா 1956 ஆம் ஆண்டு நிகழ்த்திய சொற்பொழிவு, அன்வாருல் உலூம் தொகுதி 25 பக்கம் 402, 403)

சகீஃபா பனூ சாயிதாவில் நடைபெற்ற பொதுவான பைஅத் குறித்து மேலும் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணம் திங்கட்கிழமையன்று நிகழ்ந்தது. மக்கள் சகீஃபா பனூ ஸாயிதாவில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்வதில் மும்முரமாகி விட்டார்கள். பின்னர் திங்கட்கிழமையின் எஞ்சிய பகலிலும், செவ்வாய்கிழமை அன்று காலையிலும் பள்ளிவாசலிலும் பொது பைஅத் நிகழ்ந்தது.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: சகீஃபா பனூ ஸாயிதா எனும்இடத்தில் பைஅத் நடைபெற்றிருந்தது. இரண்டாவது நாள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் அமர்ந்திருந்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு முன்னால் சொற்பொழிவாற்றினார்கள். அன்னார் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் புகழை எடுத்துரைத்தார்கள். பின்னர் கூறினார்கள்: மக்களே! நேற்று நான் உங்களிடம் ஒரு விஷயத்தை கூறி இருந்தேன். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடையவில்லை என்று கூறி இருந்தேன். நான் அல்லாஹ்வின் வேதத்தில் அது குறித்து எங்கும் குறிப்பை காணவில்லை. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் எனக்கு அப்படி எந்தவொரு வஸிய்யத்தும் செய்திருக்கவில்லை. ஆனால் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நிச்சயம் நமது விவகாரங்களுக்கு ஏற்பாடு செய்வார்கள் என்று புரிந்திருந்தேன்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: நாம் முதலில் மரணிப்போம். நம்மில் இறுதியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் இருக்கும் என்பது எமது எண்ணமாக இருந்தது. சந்தேகத்திற்கிடமின்றி அல்லாஹ் உங்களிடம் ஒரு விஷயத்தை விட்டு வைத்துள்ளான். அதிலிருந்தே அவன் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு நேர்வழி வழங்கி இருந்தான். நீங்கள் அதனை உறுதியாக பற்றிப் பிடித்துக் கொண்டால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நேர்வழி வழங்கியதைப் போன்று அல்லாஹ் உங்களுக்கும் நேர்வழி வழங்குவான். உங்களில் எல்லாரையும் விட சிறந்தவராகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழராகவும் இருக்கின்ற நபரின் கைகளில் அல்லாஹ் உங்களின் விவகாரத்தை ஒப்படைத்துள்ளான். அன்னார் (ரலி) ثَانِيَ اثْنَيْنِ إِذْ هُمَا فِي الْغَارِ என்பதை உண்மைப்படுத்தக் கூடியவர்கள் ஆவார்கள். அதாவது அந்த இருவரில் ஒருவராக அவர் இருந்தார். அப்போது அவர்கள் இருவரும் குகையில் இருந்தார்கள். எனவே எழுந்திருங்கள்.

அவரிடம் பைஅத் செய்யுங்கள் என்று கூறினார்கள். எனவே மக்கள் பைஅத்தே சகீஃபாவிற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் பொது பைஅத் நிகழ்ந்த நாளன்று குத்பா ஒன்றை வழங்கினார்கள். அல்லாஹ்வை புகழ்ந்து தூய்மையை எடுத்துரைத்த பிறகு இவ்வாறு கூறினார்கள்: மக்களே நிச்சயமாக நான் உங்களின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளேன். ஆயினும் உங்களில் எல்லாரையும் விட நான் சிறந்தவன் அல்ல. நான் நல்ல பணி செய்தால் நீங்கள் எனக்கு ஒத்துழைப்பு நல்குங்கள். என்னிடத்தில் கோணல் தன்மையை கண்டால் நீங்கள் என்னை நேராக்குங்கள். உண்மை அமானிதம் ஆகும். பொய் நம்பிக்கை துரோகம் ஆகும். நான் மற்றவர்களின் உரிமைகளை வழங்கி விடாத வரை உங்களில் பலவீனமான நபரும் எனது பார்வையில் ஆற்றல்மிக்கவர் ஆவார். மேலும் உங்களில் வலிமையான நபர் என் பார்வையில் பலவீனமானவர் ஆவார். அதாவது பிறருக்குரிய உரிமைகளை அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளாத வரை அவர் எனது பார்வையில் பலவீனமானவர் ஆவார். இன்ஷா அல்லாஹ்.

எந்த சமுதாயம் அல்லாஹ்வின் வழியில் ஜிஹாத் செய்வதை விட்டு விடுகின்றதோ அல்லாஹ் அந்த சமுதாயத்தை இழிவடைந்ததாகவும் ஆக்கி விடுகின்றான். எந்த சமுதாயத்தில் தீய நடத்தைகள் பரவி விடுமோ அல்லாஹ் அதனை துன்பத்தில் ஆழ்த்தி விடுகின்றான். நான் அல்லாஹ்விற்கும், அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடந்தால் நீங்கள் எனக்கு கட்டுப்படுங்கள். நான் அல்லாஹ் மற்றும் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படாமல் இருந்தால் எனக்கு கட்டுப்படுவது உங்களுக்கு கடமையல்ல. தொழுகைக்காக எழுந்து நில்லுங்கள். அல்லாஹ் உங்கள் அனைவரின் மீதும் கருணை புரிவானாக.

(அல்பதாயா வன்நஹாயா தொகுதி 6 பக்கம் 298, 299 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தது குறித்து பல்வேறு விஷயங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. தாரீகே தப்ரி எனும் நூலில் இவ்வாறு உள்ளது. அதாவது ஹபீப் பின் அபூசாபித் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தமது வீட்டில் இருந்தார்கள். அன்னாரிடம் ஒரு நபர் வந்து ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் பைஅத் வாங்குவதற்காக வருகை தந்துள்ளார்கள் என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மேலாடையை அணிந்து கொண்டிருந்தார்கள். மேலும் அந்த நிலையிலேயே விரைவாக வெளியேறி விட்டார்கள். அந்த ஆடையில் கமிறும் இருக்கவில்லை. மேலும் எந்த போர்வையும் இருக்கவில்லை. தன்னால் ஏதாவதொரு வகையில் காலதாமதம் ஆகுவதை அன்னார் (ரலி) விரும்பாத வகையில் அன்னார் (ரலி) வீட்டிலிருந்து வெளியேறினார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுடன் அமர்ந்து கொண்டார்கள். பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் தமது ஆடையை கொண்டு வரச் செய்தார்கள். மேலும் அதனை அணிந்து கொண்டார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் சபையிலேயே அமர்ந்திருந்தார்கள்.

(தாரீக் தபரி தொகுதி 3 பக்கம் 257 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தது குறித்து பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் 6 மாதம் வரை பைஅத் செய்யவில்லை. மேலும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு பைஅத் செய்தார்கள் என்று சில அறிவிப்புகளில் வருகின்றன. மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் முழுமையான திருப்தியுடனும், ஆர்வத்துடனும் உடனடியாக ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள் என்று சில அறிவிப்புகளில் வருகின்றது.

ஹஸ்ரத் அபூசயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் சஹாபிகள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள். அந்நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சொற்பொழிவு மேடை மீது ஏறி நின்று அன்னார் மக்களைப் பார்த்தார்கள். அப்போது அங்கு ஹஸ்ரத் அலி (ரலி) இல்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைக் குறித்து விசாரித்தார்கள். அன்ஸார் சஹாபிகளில் சிலர் சென்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை அழைத்து வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாரின் மகனே! மற்றும் அன்னார் (ஸல்) அவர்களின் மருமகனே! நீங்கள் முஸ்லிம்களின் வலிமையை குறைக்க விரும்புகின்றீர்களா? என்று கேட்டார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபாவே! என்னை பிடிக்காதீர்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத்தும் செய்து விட்டார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா லி இப்னீ கஸீர் பக்கம் 693 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாமா இப்னு கஸீர் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு முதல் நாள் அல்லது இரண்டாம் நாளன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள்.

இதுவே உண்மையாகும். ஏனென்றால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விட்டு ஒருபோதும் விலகவில்லை. மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பின்னால் நின்று தொழுகையை நிறைவேற்றுவதிலிருந்தும் விலகி இருக்கவில்லை.

(அஸீரத்துன் நபவிய்யா லி இப்னீ கஸீர் பக்கம் 694 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் முதன் முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்வதில் தாமதித்தார்கள். ஆனால் பின்னர் வீட்டிற்குச் சென்று அன்னார் ஒரு முறை எண்ணினார்கள். திடீரென எண்ணம் தோன்றியது. இறைவனே நன்கறிவான். தலைப்பாகை கூட அணியவில்லை. உடனடியாக தொப்பி அணிந்தவாறே பைஅத் செய்வதற்கு வந்து விட்டார்கள். வந்த பிறகு தான் தலைப்பாகையை கொண்டு வரும்படி செய்தார்கள். இது (அதாவது காலதாமதம்) பெரும் துன்பமாகும் என்ற சிந்தனை அவர்களின் உள்ளத்தில் தோன்றியிருக்கக் கூடும் என்று தெரிகிறது. அதன் காரணமாகவே தலைப்பாகை கூட அணியாமல் அன்னார் (ரலி) அவசரம் காட்டினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 183)

மேலும் தொப்பி அணிந்தவாறு பைஅத் செய்வதற்காக வந்து விட்டார்கள். பின்னர் தான் தலைப்பாகையை கொண்டு வரச் செய்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பாருங்கள்! அன்னார் (ரலி) மக்காவின் ஒரு சாதாரண வியாபாரியாக இருந்தார்கள். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தோன்றாமல் இருந்திருந்து மேலும் அந்நிலையில் மக்காவின் வரலாறு எழுதப்பட்டிருந்தால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அரபு நாட்டின் ஒரு கண்ணியமிக்க நபராகவும், நேர்மையான வியாபாரியாகவும் இருந்தார் என்று மட்டுமே எழுதியிருப்பார்கள். ஆனால் இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களை பின்பற்றியதால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எப்படிப்பட்ட அந்தஸ்து கிடைத்ததென்றால் இன்று முழு உலகமும் அன்னாரின் பெயரை மரியாதையுடனும், கண்ணியத்துடனும் நினைவு கூறுகின்றது.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது முஸ்லிம்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை தமது கலீஃபாவாகவும், அரசராகவும் ஆக்கிக் கொண்டார்கள். மக்காவிலும் இந்த செய்தி வந்தடைந்தது. ஒரு சபையில் ஏராளமான மக்கள் அமர்ந்திருந்தனர். அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், தந்தை அபூகுஹாஃபா அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கரத்தில் மக்கள் பைஅத் செய்து விட்டனர் என்ற செய்தியை அன்னார் செவியுற்றபோது அதனை ஒப்புக் கொள்வது சாத்தியமற்றதாக அன்னாருக்கு இருந்தது. நீங்கள் எந்த அபூபக்ரைப் பற்றி குறிப்பிடுகின்றீர்கள்? என்று அன்னார் செய்தி வழங்கிய நபரிடம் கேட்டார்கள். அதற்கு உமது மகனான அதே அபூபக்ர் தான் என்று அவர் கூறினார். அன்னார் அரபு கோத்திரங்களின் ஒவ்வொரு கோத்திரத்தின் பெயரையும் தனித்தனியாக குறிப்பிட்டு அந்த கோத்திரம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டதா? என்று அன்னார் கேட்கத் தொடங்கினார்கள். அனைவரும் ஏக மனதாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை கலீஃபாவாகவும், அரசராகவும் தேர்ந்தெடுத்து விட்டார்கள் என்று அவர் கூறியபோது அபூகுஹாஃபா உடனடியாக,

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ

وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ என்று கூறினார்கள்.

பொருள்: இறைவனைத் தவிர்த்து வணக்கத்திற்குரியவன் வேறு எவனும் இல்லை. முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் ஆவார்கள் என்று நான் சாட்சி வழங்குகின்றேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூகுஹாஃபா

ஏற்கனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள். அன்னார் இவ்வாறு கலிமாவை ஓதினார்கள். மேலும் முஹம்மது இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நபித்துவத்தை மீண்டும் ஒப்புக் கொண்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனபோது அன்னாரின் கண்கள் திறந்தன. இது இஸ்லாத்தின் உண்மைத்துவத்திற்கு ஒரு மாபெரும் சான்றாகும் என்பதை அன்னார் புரிந்து கொண்டார்கள். அவ்வாறில்லையென்றால் தனது மகனின் கைகளில் முழு அரபு தேசமும் ஒன்றுபட்டு நிற்பதற்கு அவருக்கு என்ன அந்தஸ்து உள்ளது? என்று அன்னார் கருதினார்கள்.

(தஃப்ஸீர் கபீர் தொகுதி 6 பக்கம் 205, 206)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மீண்டும் ஓரிடத்தில் இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: பாருங்கள்! இஸ்லாத்திற்கு முன்பு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நிலை என்னவாக இருந்தது! அன்னார் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனபோது அன்னாரின் தந்தை உயிருடன் இருந்தார்கள். வாழ்த்துக்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆகி விட்டார் என்று யாரோ ஒருவர் அன்னாருக்கு செய்தி கொடுத்தார். அப்போது எந்த அபூபக்ர்? என்று அன்னார் கேட்டார்கள். அதற்கு தங்களின் மகன் என்று அந்த நபர் கூறினார். அப்போதும் கூட அன்னாருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. வேறு யாராவது இருப்பார் என்று அன்னார் கூறினார்கள். ஆனால் அவருக்கு நம்பிக்கை வழங்கப்பட்டது. அல்லாஹு அக்பர். பாருங்கள்! முஹம்மது (ஸல்) அவர்களின் கண்ணியம் எப்படிப்பட்டது. அபூகுஹாஃபின் மகனை அரேபியர்கள் தமது தலைவராக ஏற்றுக் கொண்டு விட்டார்கள். சுருக்கமாக, எந்த அபூபக்ர் உலகில் எந்தவொரு மாபெரும் அந்தஸ்தையும் பெற்றிருக்கவில்லையோ அவர் முஹம்மது (ஸல்) அவர்களின் காரணமாக எந்த அளவிற்கு கண்ணியம் பெற்றார் என்றால் தற்போதும் கூட லட்சக்கணக்கான மக்கள் அன்னாருடன் தங்களை தொடர்புபடுத்திக் கொள்வதில் பெருமிதம் கொள்கின்றனர்.

(கிதாப் ஜல்ஸா ஸாலானா 17 மார்ச் 1919 அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 425)

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நன்றாக புரிந்து கொள்ளுங்கள். அல்லாஹ் எவருடைய நன்மையையும் தம்மிடம் வைத்துக் கொள்வதில்லை. அதை விட ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மடங்கு அதிகமாக திருப்பிக் கொடுத்து விடுகின்றான். எந்த அளவிற்கு ஒருவர் இறைவனுக்கு கொடுப்பாரோ அதை விட அதிகமாக அவருக்கு இறைவன் அருளுகின்றான். பாருங்கள்! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்காவின் ஒரு சாதாரண வீட்டை துறந்தார்கள். ஆனால் இறைவன் அவருக்கு எந்த அளவிற்கு கண்ணியம் வழங்கி விட்டான். அதற்கு பகரமாக அவரை ஒரு பேரரசின் எஜமானராக ஆக்கி விட்டான்.

(ஹகாயிகுல் ஃபுர்கான் தொகுதி 1 பக்கம் 244)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் தொடர்பாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கனவு ஒன்றை கண்டார்கள். இது குறித்து இவ்வாறு குறிப்பு வருகின்றது. அதாவது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு கனவில் எனக்கு காட்டப்பட்டது. நான் ஒரு கிணற்றில் இருக்கும் ஒரு பாத்திரம் மூலமாக நீரை இரைத்துக் கொண்டிருந்தேன். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அன்னார் ஒன்று அல்லது இரண்டு குடம் நீரை இரைத்து விட்டார். அன்னார் நீரை இரைக்கும்போது பலவீனம் இருந்தது. அல்லாஹ் அன்னாரின் பலவீனத்தில் திரையிடுவான். மேலும் அன்னாரை மன்னிப்பான். பின்னர் உமர் பின் கத்தாப் வந்தார். அப்போது அந்த குடம் பெரிய குடமாக மாறி விட்டது. நான் எந்த ஆற்றலும் கொடுக்கவில்லை. உமர் செய்த பணி மிகவும் ஆச்சரியத்திற்குரியதாக இருந்தது. எந்த அளவிற்கு தண்ணீரை இரைத்தார் என்றால் மக்கள் மன நிறைவு அடைந்து விட்டனர். மேலும் தத்தமது இருப்பிடங்களுக்குச் சென்று அமர்ந்து விட்டனர்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்), பாப் மனாகிப் உமர் பின் கத்தாப் (ரலி) ஹதீஸ் எண் 3682)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கனவு ஒன்றும் உள்ளது. அது குறித்து இவ்வாறு குறிப்பு வருகின்றது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு முறை கனவில் கண்டார்கள். அன்னாரின் உடலில் ஏமன் நாட்டு ஒரு ஜோடி போர்வை இருந்தது. ஆனால் அதன் மையப் பகுதியில் இரண்டு கறைகள் இருந்தன. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த கனவை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் எடுத்துரைத்தார்கள். அப்போது ஏமன் நாட்டு உடை என்பதன் பொருள் உமக்கு நல்ல சந்ததிகள் கிடைக்கும். மேலும் இரண்டு கறைகள் என்பதன் பொருள், இரண்டு ஆண்டு தலைமைத்துவம் ஆகும். அதாவது நீங்கள் இரண்டு ஆண்டு முஸ்லிம்களின் ஆட்சியாளராக இருப்பீர்கள் என்று கூறினார்கள்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 3 பக்கம் 253 ஹதீஸ் எண் 14111 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

கிலாஃபத் தேர்ந்தெடுப்பிற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்காக சில வழிகாட்டல்கள் நியமிக்கப்பட்டது தொடர்பாக இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. கிலாஃபத் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அன்னார் (ரலி) மதீனாவிற்கு வருகை தந்தார்கள். மேலும் அங்கேயே தங்கினார்கள். அன்னார் (ரலி) அவர்கள் தமது விவகாரங்களை சீர்தூக்கிப் பார்த்தார்கள். இறைவன் மீது ஆணையாக! வியாபாரம் செய்தவாறு மக்களின் விவகாரங்களை கண்காணிப்பது சரியாக இருக்க முடியாது. இந்த தொண்டிற்கு ஓய்வும், முழு கவனமும் அவசியமாகும். மற்றொரு பக்கம் எனது குடும்பத்தினருக்கும் சிறிது தேவைகள் உள்ளன என்று கூறினார்கள். எனவே அன்னார் (ரலி) வியாபாரத்தை விட்டு விட்டார்கள். பைஅத்துல் மாலிலிருந்து தனது மற்றும் தனது குடும்பத்தினரின் தேவைக்காக தினமும் செலவுகளை பெறத் தொடங்கினார்கள். அன்னார் (ரலி) அவர்களின் சொந்த செலவீனங்களுக்காக ஆண்டிற்கு 6000 திர்ஹம் தொகை ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 354 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எனவே பைத்துல் மாலிலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எந்த அளவிற்கு உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்டதென்றால் அது அன்னார் மற்றும் அன்னாரின் குடும்பத்தினரின் செலவீனங்களுக்கு போதுமானதாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணத்திற்கான நேரம் நெருங்கியபோது அன்னார் (ரலி) தமது உறவினர்களுக்கு இவ்வாறு கட்டளை வழங்கினார்கள். அதாவது பைத்துல் மாலிலிருந்து நான் பெற்றிருந்த உதவித் தொகை அனைத்தையும் திருப்பி கொடுக்கப்பட வேண்டும். மேலும் அதனை திருப்பிக் கொடுப்பதற்காக எனது இன்ன இன்ன இடங்களை விற்று விடுங்கள் என்று கட்டளையிட்டார்கள். மேலும் இன்று வரை எனக்காக செலவிட்ட முஸ்லிம்களின் செல்வத்தை அடைப்பதற்காக இந்த நிலத்தை விற்று அதன் முழுத் தொகையும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

எனவே அன்னாரின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனார்கள். மேலும் அந்தத் தொகை அன்னாரிடம் வந்தது. அன்னார் அழுதார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே! நீர் உமது பிரதிநிதியின் மீது மாபெரும் சுமையை சுமத்தி விட்டீர் என்று கூறினார்கள்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய ஹஸ்ரத் ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) என்ற நூல் பக்கம் 122)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முழு உலக இஸ்லாமிய பேரரசராக இருந்தார்கள். ஆனால் அன்னாருக்கு கிடைத்து வந்தது என்ன? பொது மக்களின் பணத்திற்கு அன்னார் பாதுகாவலராக இருந்தார்கள். ஆனால் சுயம் அந்த பணத்தின் மீது எந்த ஆதிக்கமும் செலுத்தவில்லை. நிச்சயமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பெரும் செல்வந்தராக இருந்தார்கள். ஆயினும் பெரும்பாலும் இதுவே அன்னாரின் வழக்கமாக இருந்தது. அதாவது இறைவன் புறமிருந்து அன்னாருக்கு பணம் கிடைத்த உடன் அதனை அல்லாஹ்வின் வழியில் கொடுத்து விடுவார்கள். எனவே இவ்வாறு தற்செயலாக நடந்தது. அதாவது இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது அன்னார் (ரலி) கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்போது அன்னார் (ரலி) அவர்களிடம் ரொக்கப் பணம் இருந்திருக்கவில்லை. கிலாஃபத்தின் இரண்டாவது நாளன்று அன்னார் துணி மூட்டைகளை ஏற்றிக் கொண்டார்கள். மேலும் அதை விற்பதற்கு சென்று விட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வழியில் சந்தித்தபோது, நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். இறுதியில் நானும் உண்ண வேண்டுமல்லவா? நான் துணிகளை விற்கவில்லையென்றால் நான் எங்கிருந்து உண்பது? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அவ்வாறு நடக்க முடியாது. நீங்கள் துணிகளை விற்றுக் கொண்டிருந்தால் கிலாஃபத்தின் பணியை யார் செய்வார்? என்று கேட்டார்கள்.

### நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள். அதாவது நான் இந்தப் பணியை செய்யவில்லை என்றால் பின்னர் எவ்வாறு வாழ்க்கை கழியும்? என்று கேட்டார்கள். தாங்கள் பைத்துல் மாலிலிருந்து உதவித் தொகை பெற்றுக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், இதனை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. பைத்துல் மாலின் மீது எனக்கு என்ன உரிமை உள்ளது? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: மார்க்கப் பணி செய்பவர்கள் மீது பைத்துல் மால் செல்வத்தை செலவிடுவதற்கு திருக்குர்ஆனே அனுமதி வழங்கியுள்ளது. அவ்வாறிருக்க தாங்கள் ஏன் உதவித் தொகை பெற முடியாது? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார்கள். அதன் பிறகு பைத்துல் மாலிலிருந்து அன்னாருக்கான உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் அந்த நேரத்தின் அடிப்படையில் உணவு, உடை ஆகியவற்றின் தேவையை முழுமை செய்யும் வகையில் மட்டுமே அன்னார் (ரலி) உதவித் தொகை பெற்று வந்தார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 8 பக்கம் 468)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டம் நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் காலகட்டத்தில் மிக குறுகிய காலகட்டமாக இருந்தது. அது சுமார் இரண்டே கால் வருடத்தை உள்ளடக்கியதாக இருந்தது. ஆனால் இந்த புதிய நேர்வழி பெற்ற கிலாஃபத் காலகட்டம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுவதற்கு தகுதியானதாக இருந்தது. ஏனென்றால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு மற்ற அனைவரையும் விட அதிக அபாயங்களையும், துன்பங்களையும் எதிர்கொள்ள நேரிட்டது. பின்னர் இறைவனின் அசாதாரண உதவியும், ஒத்தாசையும் அன்னாருக்கு கிடைத்து வந்தது. மேலும் இறை அருளின் காரணமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புமிக்க வீரம் மற்றும் புரியும் தன்மை போன்றவை குறுகிய காலத்திலேயே தீவிரம் மற்றும் அபாயத்தின் அனைத்து மேகங்களையும் உடைத்து விட்டது. அனைத்து அச்சமும் அமைதியில் மாற்றம் அடைந்தது. கிளர்ச்சியாளர்களும் கட்டுப்படுத்தப்பட்டனர். எந்த அளவுக்கென்றால், தடுமாற்றமடைந்த கிலாஃபத்தின் தலைமைத்துவம் உறுதிவாய்ந்ததாகவும், வலிமையான அடித்தளங்களிலும் நிலைநாட்டப்பட்டது.

கிலாஃபத்தின் தொடக்கத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எதிர்கொள்ள நேரிட்ட அபாயங்கள் மற்றும் கடினங்களை குறிப்பிட்டவாறு உம்முல் மூமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அதனைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். எனது தந்தை கலீஃபாவாக ஆக்கப்பட்டார்கள். மேலும் அல்லாஹ் அன்னாருக்கு தலைமைத்துவத்தை வழங்கினான். எனவே கிலாஃபத்தின் துவக்கத்திலேயே அன்னார் (ரலி) அவர்கள் எல்லா புறமும் குழப்பவாதிகளின் குழப்பங்களையும், பொய் நபித்துவ வாதிகளின் செயல்பாடுகளையும், நயவஞ்சக முர்தத்களின் கிளர்ச்சியையும் கண்டார்கள். அன்னார் (ரலி) மீது எந்த அளவிற்கு துன்பம் இறங்கியது என்றால் அந்த துன்பங்கள் மலைகள் மீது இறங்கி இருந்தால் அவை மண்ணோடு மண்ணாகி இருக்கும். உடனடியாக அது தூள் தூளாகி இருக்கும். ஆனால் தூதர்களுக்கு வழங்கப்படும் பொறுமை அன்னாருக்கு வழங்கப்பட்டது.

எந்த அளவுக்கென்றால் அல்லாஹ்வின் உதவி வந்தடைந்தது. பொய் நபித்துவ வாதிகள் கொலை செய்யப்பட்டனர். மேலும் முர்தர்கள் அழிக்கப்பட்டனர். குழப்பங்கள் அகற்றப்பட்டன. துன்பங்கள் விலகின. விவகாரம் தீர்க்கப்பட்டது. கிலாஃபத் விவகாரம் உறுதியடைந்தது. மேலும் அல்லாஹ் நம்பிக்கையாளர்களை ஆபத்துகளிலிருந்து காப்பாற்றினான். அவர்களின் அச்சத்தின் நிலையை அமைதியில் மாற்றி விட்டான். மேலும் அவர்களுக்காக அவர்களின் மார்க்கத்தை உறுதிபடுத்தினான். மேலும் ஓர் உலகை உண்மையில் நிலைநிறுத்தினான். குழப்பாவதிகளின் முகங்களை கருமையாக்கி விட்டான். மேலும் தனது வாக்குறுதியை முழுமை செய்தான். மேலும் தமது அடியாரான ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு உதவி செய்தான். வரம்பு மீறிய தலைவர்களையும், சிலைகளையம் அழித்து விட்டான். நிராகரிப்பாளர்களின் உள்ளங்களில் எப்படிப்பட்ட திகிலை ஏறபடுத்தினான் என்றால் அவர்கள் சோர்ந்து விட்டனர். இறுதியில் அவர்கள் கவனம் செலுத்தி தவ்பா செய்தனர். இதுவே கம்பீரமிக்க இறைவனின் வாக்குறுதியாக இருந்தது. அவன் அனைத்து உண்மையாளர்களையும் விடவும் மேலான உண்மையாளன் ஆவான். எனவே சிந்தியுங்கள். எவ்வாறு கிலாஃபத்தின் வாக்குறுதி தனது முழுமையான நிபந்தனைகளுடனும், அடையாளங்களுடனும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இருப்பின் மீது முழுமையடைந்தது என்பதை சீர்தூக்கிப் பாருங்கள்.

(சிர்ருல் குலஃபா பக்கம் 49, 50, ரூஹானீ கஸாயின் தொகுதி 8 பக்கம் 335)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு தொடக்கத்திலேயே கீழ்க்கண்ட ஐந்து வகையான துன்பங்களையும், சிக்கல்களையும் எதிர்கொள்ள நேரிட்டது. (1) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் மற்றும் பிரிவின் துன்பம். (2) கிலாஃபத் தேர்ந்தெடுப்பு, சமுதாயத்தில் குழப்பம் மற்றும் பிரிவினைக்கான அச்சமும் அபாயமும். (3) உஸாமா படையை அனுப்பி வைக்கின்ற விவகாரம். (4) முஸ்லிம் என்று கூறிக் கொண்டு ஸகாத் கொடுக்க மறுத்தல். மேலும் மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்கக் கூடியவர்கள். அவர்கள் வரலாற்றில் மானிஇனே ஸகாத் அதாவது ஸகாத் கொடுக்க மறுத்தவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். (5) முர்த்ததானவர்களின் குழப்பம். அதாவது மிகவும் வெளிப்படையாக கிளர்ச்சி மற்றும் போருக்கான அறிவிப்பு செய்த வரம்பு மீறியவர்கள் மற்றும் குழப்பவாதிகள். இந்த குழப்பங்களில் சுயமாக தம்மை நபி என்று வாதிட்டவர்களும் பங்கு பெற்றிருந்தனர்.

அச்சத்தின் இந்த அனைத்து நிலைகளிலும் துன்பம் மற்றும் குழப்பங்களை முடிவு கட்டுவதில் அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு வெற்றியை வழங்கினான். அதன் விளக்கம் பின்னர் எடுத்துரைக்கப்படும். ஆனால் அதற்கு முன்பு நீதிநெறி தீர்ப்பவரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு விரிவான மேற்கோள் எடுத்துரைக்கப்படுகிறது. அதில் அன்னார் (அலை) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் முதல் கலீஃபாவான ஹஸ்ரத் யூஷஹ் பின் நூன் அவர்களுடன் ஒப்புமை வழங்கியவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எதிர்கொண்ட சிக்கல்கள், துன்பங்கள் மற்றும் வெற்றிகளைக் குறிப்பிட்டவாறு அன்னார் (அலை) இவ்வாறு கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் வசனத்திலிருந்து இரண்டு தொடர்களுக்கும் அதாவது மூஸா (அலை) அவர்களின் கிலாஃபத் தொடருக்கும், முஹம்மதிய கிலாஃபத்தின் தொடருக்குமான ஒப்புமை நிரூபணமாகியுள்ளது. அதாவது முஹம்மதிய நபித்துவ தொடரின் கலீஃபாக்கள் மூஸாவின் நபித்துவ தொடரின் கலீஃபாக்களுடன் ஒப்புமையும், உவமையும் கொண்டுள்ளார்கள் என்பதை அந்த வசனத்திலிருந்து உறுதியாக புரிந்து கொள்ள முடியும். அந்த வசனம் இதுவாகும்:

وَعَدَ اللّٰهُ الَّذِیۡنَ اٰمَنُوۡا مِنۡکُمۡ وَعَمِلُوا الصّٰلِحٰتِ
لَیَسۡتَخۡلِفَنَّہُمۡ فِی الۡاَرۡضِ کَمَا اسۡتَخۡلَفَ
الَّذِیۡنَ مِنۡ قَبۡلِہِمۡ

பொருள்: நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றக் கூடிய நம்பிக்கையாளர்களிடம் அல்லாஹ் வாக்குறுதி செய்துள்ளான். அதாவது அவர்களின் முன்னோர்களை கலீஃபா ஆக்கியதுபோன்று அவர்களையும் பூமியில் கலீஃபாவாக ஆக்குவான்.

தற்போது இங்கு போன்ற என்ற சொல்லை அடிப்படையாக வைத்து நான் பார்க்கும்போது அது முஹம்மதிய்ய கலீஃபாக்களை மூஸவிய கலீஃபாக்களுடனான ஒப்புமையை கட்டாயமாக்கி விடுகின்றது. எனவே இந்த இரண்டு தொடர்களின் கலீஃபாக்களுக்கு மத்தியிலும் ஒப்புமை அவசியமாகும் என்பதை ஏற்றுக் கொள்ள நேரிடுகிறது. ஒப்புமையின் முதல் அடித்தளத்தை வைக்கக் கூடியவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆவார்கள். மேலும் ஒப்புமையின் இறுதி வடிவத்தை வெளிப்படுத்தக் கூடியவர் முஹம்மதிய்ய கிலாஃபத் தொடரின் இறுதி கலீஃபாவான மஸீஹ் அதாவது காத்தமுல் குலஃபா முஹம்மதிய்ய மஸீஹ் ஆவார். முதல் கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆவார்கள். அவருக்கு ஹஸ்ரத் யஷூஹ் பின் நூன் அவர்களுடன் ஒப்புமை உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு இறைவன் அன்னாரை கலீஃபாவாக ஆக்கினான். மேலும் மிக அதிகமாக அகப்பார்வையின் ஆன்மா அவரிடம் ஊதப்பட்டுள்ளது. எந்த அளவுக்கென்றால் மஸீஹ் உயிருடன் இருக்கின்றார் என்ற கொள்கைக்கு எதிரில் காத்தமுல் குலஃபா அவர்களுக்கு கடினங்களை எதிர்கொள்ள நேர்ந்திருக்கும். அந்த அனைத்து

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Naib Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

சந்தேகங்களையும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் தெளிவுடன் தீர்த்து வைத்து விட்டார்கள்.

முந்தைய நபிமார்களின் மரணத்தின் மீது நம்பிக்கை கொள்ளாத ஒரு நபர் கூட அனைத்து சஹாபிகளிலும் இருக்கவில்லை. இன்னும் கூறப்போனால் அனைத்து சஹாபிகளும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எல்லா விவகாரங்களிலும் எந்த அளவிற்கு கட்டுப்படுதலை மேற்கொண்டார்கள் என்றால் ஹஸ்ரத் மூஸாவின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் யஷூஹ் பின் நூன் கட்டுப்பட்டதைப் போன்று கட்டுப்பட்டனர். மூஸா மற்றும் யஷூஹ் பின் நூனின் முன்னுதாரணத்தைப் போன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் இறைவன் உதவி ஒத்தாசையை வழங்கினான். யூஷஹ் பின் நூன் அல்லது யஷூஹ் பின் நூன் இரண்டும் ஒரே பெயர் தான்.

(காமூஸுல் கிதாப் பக்கம் 1144)

அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையில் இறைவன் யஷூஹ் பின் நூனைப் போன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை அருளுக்குரியவராக ஆக்கினான். எந்தவொரு எதிரியாலும் அன்னாரை எதிர்கொள்ள முடியவில்லை. உஸாமாவின் படை பணிகள் அனைத்தும் மூஸாவின் பிரதிநிதியின் பணிகளுடன் ஒப்புமை கொண்டுள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கரத்தில் முழுமை செய்யப்பட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் யஷூஹ் பின் நூன் அவர்களுடன் மிகவும் விநோதமான ஒரு தொடர்பு உள்ளது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மரணத்தின் தகவல் முதன் முதலில் ஹஸ்ரத் யூஷஹ்விற்கே கிடைத்தது.

யூதர்களுக்கு ஹஸ்ரத் மூஸாவின் மரணத்தைக் குறித்து எந்தவொரு தவறும் அல்லது கருத்து வேறுபாடும் ஏற்படாமல் இருப்பதற்காக இறைவன் தாமதிக்காமல் அன்னாரின் உள்ளத்தில் வஹீயை இறக்கினான். இது யஷூவின் வேதம் தொகுதி 1–லிருந்து தெரிய வருகிறது. அதேபோன்று எல்லாரையும் விட முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முழுமையான உறுதியை வெளிப்படுத்தினார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய உடலை முத்தமிட்டு கூறினார்கள்: நீங்கள் உயிருடன் இருக்கும்போதும் தூயவராக இருந்தீர்கள். மரணத்திற்குப் பிறகும் தூயவராக உள்ளீர்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் குறித்து சில சஹாபிகளின் உள்ளங்களில் எண்ணங்கள் உருவாகின. ஒரு பொதுக் கூடத்தில் திருக்குர்ஆன் வசனத்தின் ஆதாரங்களை வழங்கி அந்த அனைத்து எண்ணங்களையும் அகற்றி விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்பது தொடர்பாக நபிமொழிகளில் முழுமையாக சீர்தூக்கிப் பார்க்காததன் காரணமாக சிலரது உள்ளங்களில் காணப்படுகின்ற அந்த தவறான எண்ணங்களையும் அகற்றி விட்டார்கள்.

மார்க்கத்தின் மிகக் கடுமையான எதிரிகள் பொய்யர்கள் மற்றும் குழப்பவாதிகளை யஷூஹ் பின் நூன் அழித்ததுபோன்று ஏராளமான குழப்பவாதிகளும், பொய் நபித்துவ வாதிகளும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கரங்களால் கொல்லப்பட்டார்கள். பனீ இஸ்ராயீல் கன்ஆன் எதிரிகள் மீது வெற்றி பெற்றிருக்காதபோது மிக முக்கியமான தருணத்தில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் மரணமடைந்திருந்தார்கள். ஏராளமான நோக்கங்கள் எஞ்சியிருந்தன. சுற்றியிருந்த எதிரிகள் கூச்சலிட்டனர். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு நிலைமை இன்னும் அபாயகரமானதாக ஆகி விட்டது. அதேபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஒரு அபாயகரமான காலகட்டம் உருவாகி இருந்தது. ஏராளமான அரபு கோத்திரங்கள் முர்ததாகி இருந்தன. சில கோத்திரங்கள் ஸகாத் கொடுக்க மறுத்து விட்டன. பல பொய் நபித்துவ வாதிகள் எழுந்து நின்றனர்.

எனவே ஒரு வலிமைமிக்க உள்ளம் படைத்த நிரந்தர இயல்புடைய உறுதிவாய்ந்த ஈமான் கொண்ட உள்ளம் கவர்ந்த மற்றும் வீரமான கலீஃபாவை அதுபோன்ற காலம் விரும்பி இருந்தது. எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக நியமிக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் கூற்றிற்கேற்ப அன்னார் கலீஃபா ஆன உடனேயே மிகுந்த துன்பங்களை எதிர்கொள்ள நேரிட்டது. ஏராளமான குழப்பங்களும் உருவாகின. கிளர்ச்சி செய்யக் கூடிய அரபு கோத்திரங்கள் எழுந்து நின்றன. பொய் நபித்துவ வாதிகள் எனது தந்தைக்கு எதிராக நின்றனர். அதே நேரம் அன்னார் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபாவாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். அன்னார் மீது உள்ளத்திற்கு வேதனை தரும் எப்படிப்பட்ட துன்பங்கள் இறங்கின என்றால் ஒருவேளை அந்த வேதனை ஒரு மலையின் மீது இறங்கி இருந்தால் பின்னர் அது தகர்ந்திருக்கும். தூள் தூளாகி இருக்கும். நிலத்துடன் நிலமாக சமமாகி இருக்கும். ஆனால் இறைவனின் ஓர் இயற்கை சட்டம் உள்ளது. அதாவது இறைத்தூதரின் ஒரு கலீஃபா அவரது மரணத்திற்குப் பிறகு நியமிக்கப்படுகின்றார். எனவே வீரம், தைரியம், உறுதிப்பாடு, அகப்பார்வை மற்றும் வலிமையான உள்ளத்தின் ஆன்மா அவரிடத்தில் ஊதப்படுகிறது.

உதாரணமாக யஷூஹ்வின் வேதம் தொகுதி 1 வசனம் 6–ல் இறைவன் ஹஸ்ரத் யஷூஹ் அவர்களிடம் இவ்வாறு கூறினான்: வலிமையாக இருங்கள். மேலும் மன உறுதியோடு இருங்கள். அதாவது மூஸா மரணித்து விட்டார். இனி நீர் வலிமையானவராக ஆகி விடுவீராக. இதே கட்டளை தான் இயற்கை சட்டத்தின் வடிவில் ஷரீஅத்தின் வடிவில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உள்ளத்திலும் இறங்கியது. ஒரு வகையில் அபூபக்ர் பின் குஹாஃபா மற்றும் யஷூஹ் பின் நூன் இருவரும் ஒரே நபரே என்பது போன்று ஒப்புமையிலிருந்தும், உவமைக்குரிய சம்பவங்களிலிருந்தும் தெரிய வருகின்றது.

கிலாஃபத் ஒப்புமை என்பது இந்த இடத்தில் மிகத் தெளிவாக தனது ஒப்புமையை வெளிப்படுத்தியுள்ளது. எனவே இரண்டு நெடிய, தொடர்களுக்கிடையில் உவமையை பார்க்கக் கூடியவர்கள் இயல்பாகவே ஒன்று தொடரின் ஆரம்பத்தை பார்க்கின்றார்கள் அல்லது இறுதியை பார்க்கின்றார்கள். ஆனால் இரண்டு தொடர்களுக்கு மத்தியில் உள்ள ஒப்புமை அதன் ஆய்வு மற்றும் ஆராய்ச்சியில் அதிக நேரம் ஆகின்றது. எனினும் அந்த மத்திய ஒப்புமையை பார்ப்பதை அவசியமாக கருதுவதில்லை. மாறாக, முதல் மற்றும் கடைசி ஒப்புமையையே பொருத்திக் கொள்கின்றனர். எனவே யஷூஹ் பின் நூன் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோருக்கிடையில் உள்ள ஒப்புமையை இறைவன் வெளிப்படுத்தியுள்ளான். இரண்டு கிலாஃபத்திற்கும் இறுதித் தொடர் உள்ளது. உதாரணமாக, யஷூஹ் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோரின் அந்த ஒப்புமையை துவக்கத்தில் வைத்து விட்டான். ஒரு வகையில் இருவரும் ஒரே இருப்பு போன்று உள்ளது அல்லது ஒரே அணிகளின் இரண்டு பகுதிகள் என்பது போல் அமைந்து விட்டன. பனீ இஸ்ராயீலில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு யூஷஹ் பின் நூன் அவர்களின் கூற்றிற்கு செவிமடுத்து அதில் எந்த கருத்து வேறுபாடும் கொள்ளாததைப் போன்று அனைவரும் தமது கட்டுப்படுதலை வெளிப்படுத்தினர்.

இதே சம்பவம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் நடந்தது. அனைவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரிவால் கண்ணீர் சிந்தியவாறு மனப்பூர்வமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தை ஒப்புக் கொண்டு விட்டனர். சுருக்கமாக, எல்லா அம்சங்களிலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஒப்புமை ஹஸ்ரத் யஷூஹ் பின் நூன் (அலை) அவர்களுடன் நிரூபணமாகின்றது. ஹஸ்ரத் யஷூஹ் பின் நூன் அவர்களுக்கு மூஸா (அலை) அவர்களுக்கு காட்டி வந்த தனது உதவியையும் அல்லாஹ் காட்டினான். அதேபோன்று இறைவன் அனைத்து சஹாபிகளுக்கு மத்தியிலும், முன்னிலையிலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பணிகளில் பரக்கத் வழங்கினான். நபிமார்களைப் போன்று அன்னாரின் வெற்றியை ஒளிமயமாக்கினான். குழப்பவாதிகள் மற்றும் பொய் நபித்துவ வாதிகளை இறைவனிடமிருந்து ஆற்றலும், கம்பீரமும் பெற்று அன்னார் கொலை செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் எவ்வாறு இறைவன் இருந்தானோ அதேபோன்று இறைவன் தன்னுடனும் இருக்கின்றான் என்பதை சஹாபிகள் அறிந்து கொள்வதற்காக அவ்வாறு செய்தார்கள்.

மற்றொரு விநோதமான தொடர்பு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் யஷூஹ் பின் நூன் அவர்களுடன் உள்ளது. அது என்னவென்றால், ஹஸ்ரத் யஷூஹ் பின் நூன் அவர்களுக்கு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு யர்தன் என்ற பெயருடைய ஒரு அபாயகரமான நதியை படையுடன் கடக்க நேரிட்டது. யர்தனில் ஒரு புயல் வீசியது. நதியை கடப்பது சாத்தியமற்றதாக இருந்தது. அந்த புயலால் நதியை கடக்க முடியவில்லையென்றால் எதிரிகளின் கரங்களால் பனீ இஸ்ராயீலின் அழிவு உறுதியானதாக இருந்தது. ஹஸ்ரத் மூஸா

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Sec. Waqf-e-Jadid, Melapalayam)

(அலை) அவர்களுக்குப் பிறகு தமது கிலாஃபத் காலத்தில் யஷூஹ் பின் நூன் அவர்கள் சந்தித்த அபாயகரமான விவகாரம் இதுவாகவே இருந்தது. அந்த நேரத்தில் இறைவன் அந்த புயலில் இருந்து அற்புதமான முறையில் யூஷஹ் பின் நூன் மற்றும் அன்னாரது படையை பாதுகாத்து விட்டான். யர்தனில் வறட்சியை ஏற்படுத்தி விட்டான். அதன் மூலமாக அவர்கள் மிக எளிதாக கடந்து விட்டார்கள்.

எவ்வாறிருப்பினும் இவ்வாறு இறைவன் அன்னாரை புயல் மற்றும் எதிரியின் துன்பத்திலிருந்து பாதுகாத்து விட்டான். அதே புயலுக்கு ஒப்பாக இன்னும் கூறப்போனால் அதை விட அதிகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு கலீஃபத்துல் ஹக் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையும், ஒரு லட்சத்திற்கும் அதிகமான சஹாபிகளின் கூட்டத்தினரையும் துன்பம் எதிர்கொண்டது. அதாவது நாட்டில் கடுமையான கிளர்ச்சி பரவியது.

قَالَتِ الْأَعْرَابُ آمَنَّا ۖ قُل لَّمْ تُؤْمِنُوا وَلَٰكِن
قُولُوا أَسْلَمْنَا وَلَمَّا يَدْخُلِ الْإِيمَانُ فِي قُلُوبِكُمْ

என்று எந்த அரபு கோத்திரங்களைக் குறித்து இறைவன் கூறி இருந்தானோ அவர்கள் இந்த முன்னறிவிப்பிற்கேற்ப வழிகெடுவது அவசியமானதாக இருந்தது. எனவே இந்த முன்னறிவிப்பு முழுமையடைந்தது. அதாவது இந்த வசனத்தின் பொருள் என்னவென்றால், காட்டரபிகள் நாங்கள் ஈமான் கொண்டு விட்டோம் என்று கூறுகின்றனர். நீங்கள் ஈமான் கொள்ளவில்லை என்று நீர் கூறி விடுவீராக. எனினும் நாங்கள் முஸ்லிமாகி விட்டோம் என்று மட்டும் கூறுவீராக. தற்போது உங்களின் உள்ளங்களில் ஈமான் நுழையவில்லை.

எவ்வாறிருப்பினும் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அவ்வாறே நிகழ்ந்தது. அந்த மக்கள் அனைவரும் முர்தத் ஆகி விட்டனர். சிலர் ஸகாத் கொடுக்க மறுத்து விட்டனர். மேலும் சில தீய மக்கள் நபித்துவ வாதம் செய்து விட்டனர். அவர்களுடன் துர்பாக்கியசாலிகளான பல லட்சம் மனிதர்கள் ஒன்று சேர்ந்தனர். எதிரிகளின் எண்ணிக்கை எந்த அளவுக்கு அதிகரித்து விட்டதென்றால், அவர்களுக்கு முன்னால் சஹாபிகளின் கூட்டம் ஒன்றும் அற்றதாக இருந்தது. நாட்டில் ஒரு கடுமையான புயல் வீசியது. ஹஸ்ரத் யூஷஹ் பின் நூன் (அலை) அவர்கள் சந்தித்த அபாயகரமான அந்த வெள்ளத்தை விட பெரிய புயலாக இருந்தது. யூஷஹ் பின் நூன் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அறியாமலேயே கடுமையான சோதனைக்கு ஆளாகி விட்டார்கள். நதியில் கடுமையான புயல் வீசியது. எந்த கப்பலும் இருந்திருக்கவில்லை. எல்லா புறமிருந்தும் எதிரியின் அச்சம் இருந்தது.

அதே சோதனை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் நேரிட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அரபு கோத்திரங்களின் முர்தத் என்ற ஒரு கடுமையான புயல் வீசியது. பொய் நபித்துவ வாதிகளின் மற்றொரு புயலானது அவர்களுக்கு வலிமை சேர்த்ததாக அமைந்தது. அந்தப் புயல் யூஷஹ் எதிர்கொண்ட புயலை விட குறைவானதாக இருக்கவில்லை. மாறாக, மிகப்பெரியதாக இருந்தது. பின்னர் இறைவனின் கூற்று ஹஸ்ரத் யூஷஹ்விற்கு வலிமை சேர்த்தது. நீர் எங்கெல்லாம் செல்கின்றீரோ நான் உம்முடன் இருக்கின்றேன் என்று இறைவன் கூறினான். நீர் வலிமை வாய்ந்தவராக ஆகி விடுவீராக. மேலும் மன மகிழ்வு கொள்வீராக. தைரியம் இழந்து விடாதே. அப்போது யஷூவிடம் பெரும் ஆற்றலும், உறுதிப்பாடும் உருவானது. மேலும் இறைவனின் ஆறுதலுக்குப் பிறகு உருவாகின்ற ஈமான் அன்னாரிடம் உருவானது.

அதேபோன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கிளர்ச்சி எனும் புயலின் நேரத்தில் இறைவனிடமிருந்து ஆற்றல் கிடைத்தது. எந்த நபருக்கு இஸ்லாமிய வரலாற்றைப் பற்றி தெரிந்திருக்குமோ அவர் நிச்சயமாக இந்த விஷயத்திற்கு சாட்சி வழங்க முடியும். அதாவது அந்த புயல் எவ்வளவு கடுமையான புயலாக இருந்ததென்றால் ஒருவேளை இறைவனின் கரம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் இல்லாமல் இருந்திருந்தால், உண்மையில் இஸ்லாம் இறைவன் புறமிருந்து தோன்றாமல் இருந்திருந்தால், ஒருவேளை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உண்மையில் உண்மையான கலீஃபாவாக இல்லாமல் இருந்திருந்தால் அந்த நாளன்றே இஸ்லாம் அழிந்து போயிருக்கும்.

யஷூஹ் நபியைப் போன்று இறைவனின் பரிசுத்த வேதத்தால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆற்றல் பெற்றார்கள். ஏனென்றால் இறைவன் திருக்குர்ஆனில் இந்த சோதனை குறித்து ஏற்கனவே செய்தி வழங்கி இருந்தான். எனவே எந்த நபர் கீழ்க்கண்ட வசனத்தை சீர்தூக்கி படிப்பாரோ அவர் நிச்சயமாக நம்பிக்கை கொண்டு விடுவார். நிச்சயமாக சந்தேகத்திற்கிடமின்றி இந்த சோதனையின் செய்தி திருக்குர்ஆனில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது என்று நம்புவார். அந்த செய்தி இதுவாகும்:

وَعَدَ اللَّهُ الَّذِينَ آمَنُوا مِنكُمْ وَعَمِلُوا الصَّالِحَاتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ
فِي الْأَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِينَ مِن قَبْلِهِمْ
وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِينَهُمُ الَّذِي ارْتَضَىٰ لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُم
مِّن بَعْدِ خَوْفِهِمْ أَمْنًا ۚ يَعْبُدُونَنِي لَا يُشْرِكُونَ بِي
شَيْئًا ۚ وَمَن كَفَرَ بَعْدَ ذَٰلِكَ فَأُولَٰئِكَ هُمُ الْفَاسِقُونَ

பொருள்: நம்பிக்கை கொண்டு நற்செயல் ஆற்றியவர்களை அல்லாஹ் அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக ஆக்கியதுபோன்று அவர்களையும் பூமியில் கலீஃபாவாக ஆக்குவான். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு நிலைபெற்றிருந்த அந்த கிலாஃபத்தைப் போன்ற கிலாஃபத்தின் தொடரை அல்லாஹ் ஏற்படுத்துவான். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு ஏற்படுத்தி இருந்த தொடரைப்போன்று ஏற்படுத்துவான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சுயமே இதற்கு விளக்கமளித்தவாறு சிறிது கூடுதல் மொழிபெயர்ப்பும் செய்துள்ளார்கள். அதாவது அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு நிலைநாட்டிய கிலாஃபத்தைப் போன்ற அதே தொடரை நிலைநாட்டுவான். அவர்களின் மார்க்கத்தை அதாவது அவர்கள் விரும்பிய இஸ்லாத்தை பூமியில் நிலைபெறச் செய்து விடுவான். மேலும் அதை நிலைபெறச் செய்து விடுவான். அச்சத்தின் நிலையை அமைதியின் நிலையில் மாற்றி விடுவான். அவர்கள் என்னையே வணங்குவார்கள். வேறு எவரையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள்.

பாருங்கள்! இந்த வசனத்தில் தெளிவாக இறைவன் கூறியிருக்கின்றான். அதாவது அச்சத்தின் காலமும் வரும். அமைதி சென்று விடும். ஆனால் இறைவன் அந்த அச்சத்தின் நிலையை மீண்டும் அமைதியின் நிலையில் மாற்றி விடுவான். ஆக இதே அச்சம் தான் யஷூஹ் பின் நூன் அவர்களுக்கும் ஏற்பட்டது. இறைவனின் கூற்றின் மூலம் ஆறுதல் வழங்கப்பட்டதுபோன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் இறை கூற்றால் ஆறுதல் நல்கப்பட்டது.

(தொஹ்ஃபா கோல்டவிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 183 – 189)

இந்த ஐந்து விஷயங்களின் விளக்கங்கள் இனி வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்.

தற்போதைய நாட்களில் உலகில் ஏற்பட்டுள்ள போரின் நிலைகளுக்காக துஆ செய்யுங்கள். இந்த நிலை அதிபயங்கரமாக ஆகிக் கொண்டே செல்கின்றது. தற்போது அணு ஆயுதப் போருக்கான மிரட்டல்களும் வழங்கப்படுகின்றன. நான் ஏற்கனவே கூறியிருந்ததுபோன்று, இதன் அபாயகரமான விளைவுகள் ஏற்படும். இதனை நான் பலமுறை கூறி விட்டேன். அதன் விளைவுகளை அடுத்த தலைமுறையினரும் சந்திக்க நேரிடும். இவர்களுக்கு அல்லாஹ் தான் அறிவை கொடுக்க வேண்டும். இந்த நாட்களில் தரூதும் அதிகமாக ஓதுங்கள். அதிகமாக பாவமன்னிப்பு கோருங்கள். அல்லாஹ் நமது பாவங்களையும் மன்னிப்பானாக. மேலும் உலக தலைவர்களுக்கும் அறிவையும், புரிதலையும் வழங்குவானாக.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு தருணத்தில் குறிப்பாக இந்த துஆவை செய்யும்படி அறிவுறுத்தி இருந்தார்கள். அந்த துஆ இதுவாகும்:

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ
حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

இந்த துஆவை அதிகமாக ஓதுங்கள். மேலும் ருகூவிற்குப் பிறகு எழுந்து நின்று இந்த துஆவை செய்து வாருங்கள் என்று அன்னார் (அலை) கூறியிருந்தார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 9)

எனவே இன்றைய நாட்களில் இதனையும் மிக அதிகமாக ஓதி வருவது அவசியமாகும். அல்லாஹ் நன்மைகளையும் வழங்குவானாக. எல்லா வகையான நெருப்பின் தண்டனையிலிருந்தும் அனைவரையும் பாதுகாப்பானாக.

இன்று நான் ஒரு காயிப் ஜனாஸா தொழுகையும் நடத்துவேன். அது சிரியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அபுல்ஃபர்ஜுல் ஹஸனி சாஹிப் அவர்களுடையதாகும். பிப்ரவரி 13 ஆம் தேதி 89 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னாரின் தந்தையாரான மதிப்பிற்குரிய முஹம்மது அல் ஹஸனி சாஹிப் சிரியாவின் ஆரம்ப கால அஹ்மதிகளை சார்ந்தவராக இருந்தார்கள். அன்னார் மவ்லானா ஜலாலுத்தீன் சாஹிப் ஷம்ஷ் அவர்கள் மூலமாக பைஅத் செய்திருந்தார்கள். அபுல்ஃபர்ஜி அல்ஹஸனி சாஹிப் சிரியாவின் முதல் அமீர் ஜமாஅத்தான மதிப்பிற்குரிய முனீர் அல்ஹஸனி சாஹிப் அவர்களின் மருமகன் ஆவார்கள். அன்னாரின்

காலத்திலும் நாயிப் அமீராக ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வந்துள்ளார்கள். பின்நாட்களிலும் நாயிப் அமீராக இருந்தார்கள். மர்ஹூம் 1933 ஆம் ஆண்டில் பிறந்தார். சிறிய தந்தை முனீர் அல்ஹஸனி அவர்களின் நன்மை, இறையச்சம், அறிவார்ந்த உரையாடல் ஆகியவற்றால் மர்ஹூம் மிகுந்த தாக்கத்திற்கு உள்ளாகி இருந்தார்கள். அவர்களின் சபைகளில் பெரும்பாலும் அமர்ந்து வந்தார்கள். 15 வயதுடையவராக இருந்தபோது ஒரு நாள் ரேடியோவில் திலாவத்தை செவியுற்று உள்ளம் நிறைந்தது. மேலும் அழத் தொடங்கினார்கள். தனது சிறிய தந்தையாரிடம் சென்றார்கள். நான் அல்லாஹ்வைக் குறித்து மேலும் அறிய விரும்புகின்றேன் என்று கூறினார்கள். அன்னார் அவருக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல் ஒன்றை கொடுத்தார்கள். நூலைப் படித்து விட்டு அன்னாரின் உள்ளத்தின் நிலைமை மாறி விட்டது. அன்னார் தனது சிறிய தந்தையாரிடம் சென்றார்கள். மேலும் நான் பைஅத் செய்ய விரும்புகின்றேன் என்று கூறினார்கள்.

அன்னாருக்கு ஜமாஅத்தின் மூன்று கலீஃபாக்களை சந்திப்பதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1955ல் டமாஸ்கஸிற்கு வருகை தந்தபோது மர்ஹூமிற்கு அன்னாரை சந்திப்பதற்கு நற்பேறு கிடைத்தது. மேலும் பாதுகாப்பு பணிகளில் தொண்டாற்றுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. 1972ல் பாகிஸ்தான் செல்வதற்கும், ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுக்கு அருகில் இருந்து ரப்வாவில் சில மாதங்கள் தங்கி உருது படிப்பதற்கும், ஜமாஅத்தின் ஞானங்களிலிருந்து பயன் பெறுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதே ஆண்டு அன்னாருக்கு பாகிஸ்தானிலிருந்து காதியான் செல்வதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. 1986ல் ஆண்டு மாநாடு சந்தர்ப்பத்தில் இங்கிலாந்து வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களை சந்திப்பதற்கு நற்பேறு கிடைத்தது. பின்னர் 2017 ஆம் ஆண்டில் அன்னாருக்கு மீண்டும் காதியான் செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. ஜல்ஸாவில் அரபி மொழியில் ஒரு சுருக்கமான சொற்பொழிவும் ஆற்றினார்கள்.

மர்ஹூம் மிகவும் நல்லவராகவும், தூயவராகவும், செயல்மிக்க அறிஞராகவும் இருந்தார்கள். அன்னாருக்கு பிள்ளைகள் ஏதும் இல்லை. அன்னாரின் மனைவியும் அஹ்மதி கிடையாது.

சிரியாவின் சதர் ஜமாஅத் கூறுகின்றார்கள்: 2017ல் நான் அன்னாருடன் காதியானிற்கு சென்றேன். அன்னார் மிகவும் பலவீனமாக இருந்தபோதிலும் அன்னாருக்கு எந்த அளவிற்கு ஆர்வம் இருந்ததென்றால் அன்னார் பூமியில் நடப்பதுபோன்றே தெரியவில்லை. மாறாக, காற்றில் பறந்து கொண்டிருப்பதைப் போன்று தெரிந்தது.

முதலில் நோயின் காரணமாக செல்ல விரும்பவில்லை. ஆனால் நீங்கள் சென்று வாருங்கள் என்று நான் கூறியபோது பின்னர் அன்னார் இவ்வாறு கூறினார்கள்:

அதாவது காலத்தின் கலீஃபாவின் கட்டளை வந்து விட்டது. அல்லது செல்லுங்கள் என்று அன்னார் கூறி விட்டார்கள். அவ்வாறிருக்க பின்னர் எந்தவொரு விஷயமும் இல்லை. அல்லாஹ் அருள் செய்தான். அன்னாரின் நோயும் பலவீனமும் அன்னாரின் மனைவியின் நோயும் இருவருக்கும் சரியாகி விட்டது. அல்லாஹ்வின் அருளால் அங்கு சென்றார்கள். இன்னும் கூறப்போனால், மினாரத்துல் மஸீஹின் மீது ஏறுவதற்கும் அன்னாருக்கு நற்பேறு கிடைத்தது.

கூறுகின்றவர்கள் கூறுகின்றார்கள்: அங்கு இளைஞர்களைப் போன்று மிக வேகமாக மேலே ஏறி விட்டார்கள். ஆனால் அதற்கு முன்பு நடப்பதற்கு கூட கஷ்டப்பட்டு வந்தார்கள்.

முஸ்லிம் அத்ரூபி சாஹிப் மருத்துவர் ஆவார்கள். அன்னார் இவ்வாறு எழுதுகின்றார்கள்: மர்ஹூம் ஒரு வலியுல்லாஹ் மற்றும் சிரியாவின் சான்றோர்களில் ஒருவராக இருந்தார்கள். நானும் மற்ற நண்பர்களும் இதற்கு சாட்சி ஆவோம். அன்னார் சிரியாவின் மிகப் பிரபலமான வியாபாரிகளைச் சார்ந்தவராக இருந்தார்கள். பின்பற்றத்தக்க முன்மாதிரியாக இருந்தார்கள். கடை வீதிகளில் அன்னாருக்கு நல்ல பெயர் இருந்தது. மர்ஹூம் மிகவும் நுட்பமான ஞானம் கொண்டவராகவும், புத்திகூர்மை கொண்டவராகவும் இருந்தார்கள். தொடர்ந்து தஹஜ்ஜுத்தை நிறைவேற்றி வந்தார்கள். உண்மையான கனவுகளை பார்க்கக் கூடியவராக இருந்தார்கள். ஏராளமான கனவுகள் நிறைவேறி உள்ளன. அவற்றில் பெரும்பாலும் சிரியாவின் நிலவரம் மற்றும் துன்பங்களைப் பற்றியதாக இருந்தது. பலதரப்பட்ட முரப்பிமார்கள் அரபி கல்வியை பெறுவதற்காக சிரியா செல்லும்போது அன்னார் அவர்களுக்கு மிகுந்த மரியாதை அளித்து வந்தார்கள். ஏனென்றால் முதலில் அவர்கள் காலத்தின் கலீஃபாவின் சார்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். இரண்டாவதாக, அந்த முபல்லிக்மார்கள் தப்லீக்கிற்காக வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளார்கள்.

ஹிஸாமன் நகீப் சாஹிப் சிரியாவின் முன்னாள் சதர் ஆவார்கள். இன்றைய நாட்களில் துருக்கியில் உள்ளார்கள். அன்னார் இவ்வாறு எழுதுகின்றார்கள்: மர்ஹூம் ஏராளமான நற்பண்புகளுக்கு எஜமானராக இருந்தார்கள். அதில் மிகவும் முக்கியமான விஷயம் அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மீதும், அன்னாரின் கலீஃபாக்களின் மீதும் கொண்டிருந்த நேசம் ஆகும். மர்ஹூமுடன் நான் மேற்கொண்ட காதியான் பயணத்தை வாழ்நாள் முழுவதும் என்னால் மறக்க முடியாது. அந்த பயணத்தின் ஒவ்வொரு விஷயமும் ஓர் அற்புதமாக இருந்தது. நான் காதியானில் முழு நேரமும் அன்னாருடன்இருந்தேன். காதியானில் அன்னார் இவ்வாறே துஆ செய்து வந்தார்கள்: இறைவா! காலத்தின் கலீஃபாவிற்கு உதவி செய்வாயாக. அன்னாரின் வாழ்நாளிலும் மேலும் அன்னாரின் ஒவ்வொரு பணியிலும் அருள் செய்வாயாக என்ற ஒரே துஆவை அன்னார் செய்து வந்தார்கள்.

பின்னர் எழுதுகின்றார்கள்: ஒரு சபையில் காலத்தின் கலீஃபாவின் ஏதாவது மேற்கோளை எவராவது எடுத்துரைத்தால் அப்போது யாரையும் பேசுவதற்கு அனுமதிக்க மாட்டார்கள். ஏனென்றால் அந்த வழிகாட்டலை முழுமையாக கேட்க வேண்டும். புரிய வேண்டும் மற்றும் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்து வந்தார்கள். அன்னார் ஒரு மிகவும் தன்னலமற்ற மனிதராக இருந்தார்கள். ஒருவர் தம்மைப் பாராட்டும்போது அதைக்கேட்டு மகிழ்ச்சியடைய மாட்டார்கள். மாறாக, இந்த விஷயங்களை விட்டு விடுங்கள் என்று அன்னார் அந்த நபரை கண்டித்து கூறுவார்கள். அல்லாஹ் மற்றும் அவனது ஜமாஅத்தே அவருக்கு அனைத்துமாக இருந்தது. ஜமாஅத்தைப் பற்றி பேசுங்கள் என்று கூறுவார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை படிப்பதை அன்னார் ஒருபோதும் விட்டு விடவில்லை. கடைசி வருடத்தில் அன்னார் மிகவும் நோய்வாய்ப்பட்டார்கள். அந்த வருடத்தை தவிர மற்ற நாட்களில் அன்னார் ஒருபோதும் ஜமாஅத் நூல்களை வாசிப்பதை விட்டு விடவில்லை. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் தஃப்ஸீரே கபீருடன் அன்னாருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. ஒருவர் அன்னாரிடம் திருக்குர்ஆனின் ஏதாவதொரு வசனத்தின் விளக்கத்தை கேட்டால் அன்னார் தஃப்ஸீரே கபீரின் விளக்கவுரையை எடுத்துரைப்பார்கள்.

அன்னாரின் அண்ணன் மகன் முஹம்மது அம்மார் அல்மிஸ்கீ சாஹிப் இங்கு யூ.கேவில் தான் வசிக்கின்றார். அவர் கூறுகின்றார்: எனக்கு 14 வயது இருந்தபோது அன்னாருடன் ஜுமுஆ தொழுகையை தொழுது வந்தேன். திரும்பி வரும்போது அன்னாருடைய வீட்டிற்கு செல்வேன். வழிப்பாதையில் அன்னாரிடம் ஜமாஅத்தின் ஞானங்களைப் பற்றி கேள்வி கேட்டு வந்தேன். மிக விளக்கமாக பதிலளிக்கக் கூடியவராக இருந்தார்கள். சிரியாவில் ஜமாஅத் நூல்கள் கிடைக்கவில்லை. ஜமாஅத் உறுப்பினர்களை ஜமாஅத்தின் ஞானங்களாக மாற்றியதில் மர்ஹூமிற்கு மிகுந்த பங்கு உள்ளது. அன்னார் ரப்வா சென்றிருந்தபோது உருது வாசிப்பதற்கும், படிப்பதற்கும் கற்றுக் கொண்டிருந்தார்கள். உருது புத்தகங்களை கொண்டு வந்தார்கள். பின்னர் உருது புத்தகங்களை படித்து புரிந்து பின்னர் அதனை மொழியாக்கம் செய்து ஜமாஅத் உறுப்பினர்களுக்கு கூறுவதற்கு அன்னார் முயற்சி செய்து வந்தார்கள்.

மர்ஹூம் ஒரு தன்னலமற்ற மனிதராக இருந்தார்கள். ஒருபோதும் பதவிக்கு ஆசைப்பட்டதில்லை. எப்போதும் தொண்டராக இருப்பதையே அன்னார் விரும்பினார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அன்னாரை அமீராக ஆக்க விரும்பியபோதும் அன்னார் இவ்வாறு கூறி விட்டார்கள்: அதாவது குடும்ப ரீதியாக இந்த அனைத்து தலைமைத்துவ பதவிகளும் செயல்படுகின்ற என்று மக்கள் கூறுவார்கள். எனவே வேறு யாரையாவது அமீராக்குங்கள். நான் அவருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன் என்று கூறினார்கள். பின்னர் தம்மை விட வயதில் குறைந்தவராக இருந்த அமீருடனும் ஒத்துழைப்பு வழங்கினார்கள். எண்ணற்ற ஒத்துழைப்பு வழங்கினார்கள். இன்னும் கூறப்போனால் முன்னுதாரணத்தை நிலைநாட்டி விட்டார்கள்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் மனைவி தொடர்பான அனைத்து துஆக்களையும் முழுமை செய்வானாக. அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கு அன்னாருக்கு நற்பேறு வழங்குவானாக.

தொழுகைக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன்.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 25 பிப்ரவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு தப்லீக் மாதம் **25 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

அறிவிப்பாளர் கூறுகின்றார்: சயீத் பின் முஸய்யப் என்னிடம் கூறினார்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த வசனத்தை ஓதிக்கேட்டபோது நான் எந்த அளவிற்கு பதற்றமடைந்தேன் என்றால் அச்சத்தின் காரணமாக எனது கால்களை என்னால் தாங்க முடியவில்லை. மேலும் நான் நிலத்தில் விழுந்து விட்டேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த வசனத்தை ஓதிக் கேட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி, ஹதீஸ் எண் 4454)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை கடந்து சென்றார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மரணமடையவில்லை. அல்லாஹ் நயவஞ்சகர்களை கொன்று விடாதவரை அன்னார் (ஸல்) அவர்கள் மரணமடைய மாட்டார்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்போது கூறிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) கூறுகின்றார்கள்: அவர்கள் அதாவது சஹாபிகள் இந்த விஷயத்தை செவிமடுத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். மேலும் தங்களது தலைகளை நிமிர்த்தி நின்று கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: மனிதரே! நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை நோக்கி, நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். மேலும் اِنَّكَ مَيِّتٌ وَّاِنَّهُمْ مَّيِّتُوْنَ என்று அல்லாஹ் கூறியிருப்பதை நீர் கேட்கவில்லையா? என்று கூறினார்கள்.

பொருள்: நீங்களும் மரணிக்கக் கூடியவர்கள் ஆவீர்கள். அவர்களும் மரணிக்கக் கூடியவர்கள் ஆவார்கள்.

பின்னர் وَمَا جَعَلْنَا لِبَشَرٍ مِّنْ قَبْلِكَ الْخُلْدَ என்ற வசனத்தை ஓதினார்கள். அதாவது நாம் உமக்கு முன்னர் எந்த மனிதருக்கும் நிரந்தரமான வாழ்க்கையை வழங்கவில்லை. பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சொற்பொழிவு மேடைக்கு வந்து சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

எவ்வாறிருப்பினும் இந்த ஹதீஸின் விளக்கவுரையில் அபூஅப்தில்லாஹ் குர்தபி அறிவிக்கின்றார்: இந்த விஷயத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீரத்திற்கு மாபெரும் சான்று உள்ளது. ஏனென்றால் துன்பங்கள் இறங்கும் நேரத்தில் உள்ளம் உறுதிப்பாட்டுடன் இருப்பதும் வீரத்தின் உச்சபட்சமாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின் துன்பத்தை விட அந்த நேரத்தில் வேறு பெரிய துன்பம் முஸ்லிம்களுக்கு இருக்கவில்லை. எனவே அந்த நேரத்தில் அன்னார் (ரலி) அவர்களின் வீரமும், ஞானமும் வெளிப்பட்டது.

(அலம்வாஹிப் லித்துனயா தொகுதி 4 பக்கம் 547 – 2004 ஆம் ஆண்டு இஸ்லாமியா அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

இரண்டுமே வெளிப்பட்டன. வீரமும் வெளிப்பட்டது. எனவே அன்னார் துன்பத்தை தாங்கிக் கொண்டார்கள். மேலும் திருக்குர்ஆன் வசனத்திற்கு வழங்கிய அந்த விளக்கத்திலிருந்து அன்னாரின் ஞானமும் வெளிப்பட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹதீஸ் நூல்களிலும், வரலாற்று நூல்களிலும் இந்த விஷயம் பதியப்பட்டுள்ளது. அதாவது இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணம் சஹாபிகளின் மீது இந்த அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தியது. அதாவது சஹாபிகள் பதற்றமடைந்து விட்டனர். சிலரால் பேச முடியாமல் போனது. மேலும் சிலரால் நடக்க முடியாமல் இருந்தது. மேலும் சிலர் தமது சுய நினைவையும், தமது அறிவையும் கட்டுப்பாட்டில் வைக்க முடியாமல் இருந்தனர். வேறு சிலர் மீது இந்த துன்பம் எந்த அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அவர்கள் சில நாட்களிலேயே அதனை எண்ணி வருந்தி மரணமடைந்து விட்டனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மீது இந்த துன்பத்தின் தாக்கம் எந்த அளவிற்கு ஏற்பட்டதென்றால் அன்னார் (ரலி) அவர்கள் ஹுஸூர் (ஸல்) அவர்களின் மரணத்தின் செய்தியை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மேலும் வாளை ஏந்திக் கொண்டு நின்று விட்டார்கள். மேலும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்று எவரொருவர் கூறிவாரோ நான் அவரை கொன்று விடுவேன் என்று கூறுனார்கள். மேலும் மூஸா (அலை) அவர்களைப்போன்று அன்னார் (ஸல்) அவர்களும் இறைவனால் அழைக்கப்பட்டுள்ளார்கள். மூஸா (அலை) அவர்கள் 40 நாட்களுக்குப் பிறகு திரும்பி வந்ததை போன்று அன்னார் (ஸல்) அவர்கள் சிறிது காலத்திற்குப் பிறகு திரும்பி வருவார்கள். மேலும் அன்னார் (ஸல்) மீது பழிசுமத்தக் கூடியவர்கள் மற்றும் நயவஞ்சகர்களை கொலை செய்வார்கள். மேலும் சிலுவையில் அறைவார்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்.

இந்த அளவிற்கு உத்வேகத்துடன் அன்னார் (ரலி) அவர்கள் தமது இந்த வாதத்தில் பிடிவாதமாக இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்களின் இந்த வாதத்தை மறுப்பதற்கு சஹாபிகளில் எவருக்கும் ஆற்றல் இருக்கவில்லை. அன்னார் (ரலி) அவர்களின் அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த உத்வேகத்தைப் பார்த்து இந்த விஷயமே சரியானது என்று சில மக்களுக்கு உறுதி ஏற்பட்டு விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடையவில்லை என்று நம்பினர். அவர்களின் முகங்களில் மகிழ்ச்சியின் அடையாளங்கள் வெளிப்படத் தொடங்கின. ஒன்று, தலையை தொங்க போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார்கள் அல்லது மகிழ்ச்சியால் அவர்கள் தலையை நிமிர்த்தத் தொடங்கினர். இந்த நிலையைக் கண்டு தொலைநோக்கு பார்வை கொண்ட சில சஹாபிகள் ஒரு சஹாபியை அனுப்பி வைத்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உடல்நிலை இடையில் சிறிது நன்றாக இருந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களின் அனுமதியுடன் மதீனாவிற்கு அருகில் இருந்த ஒரு கிராமத்தின் பக்கம் சென்றிருந்தார்கள். எனவே அன்னாரை விரைவாக திரும்ப அழைத்து வருவதற்காக சில சஹாபிகள் ஒரு சஹாபியை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள்.

அந்த சஹாபி சென்று கொண்டிருக்கும்போதே வழியில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை சந்தித்து விட்டார். அன்னார் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அன்னாரை கண்டதும் அவரது கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து விட்டது. தகவல் கொடுக்க சென்று கொண்டிருந்த அந்த சஹாபியால் துக்கத்தின் உணர்வை கட்டுப்படுத்த முடியவில்லை. விஷயம் என்ன? என்பதை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் புரிந்து கொண்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்து விட்டார்களா? என்று அந்த சஹாபியிடம் அன்னார் (ரலி) கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறந்து விட்டதாக எவர் கூறுவாரோ நான் அவரது தலையை வாளால் வெட்டி விடுவேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுவதாக அந்த சஹாபி கூறினார்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டிற்குச் சென்றார்கள். அன்னார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய உடலின் மீது போர்த்தப்பட்டிருந்த போர்வையை விலக்கி அன்னார் பார்த்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் உண்மையிலேயே மரணித்து விட்டார்கள் என்பதை அன்னார் (ரலி) கண்டு கொண்டார்கள். தமது அன்பிற்குரிய நேசரின் பிரிவின் துக்கத்தால் அன்னார் (ரலி) கண்ணீர் வடித்தார்கள். மேலும் கீழே குனிந்து அன்னார் (ஸல்) அவர்களின் நெற்றியில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முத்தமிட்டார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் உங்களுக்கு இரண்டு மரணங்களை ஒன்றுகூட்ட மாட்டான். எந்தவொரு நபியின் மரணத்தாலும் ஏற்படாத நஷ்டம் உங்களது மரணத்தால் உலகத்திற்கு ஏற்பட்டுள்ளது. உமது இருப்பு அனைத்து பண்புகளிலும் உயர்வானது. எந்தவொரு இரங்கலும் உமது பிரிவின் துக்கத்தை பிரிக்க முடியாது. உமது உயர்வு இப்படிப்பட்டதாகும். உமது மரணத்தை தடுப்பது எமது ஆற்றலுக்குட்பட்டதாக இருந்திருந்தால் நாங்கள் அனைவரும் எங்களது உயிர்களைக் கொடுத்து உமது மரணத்தை தடுத்திருப்போம். இதைக் கூறியவாறு அன்னார் (ஸல்) அவர்களின் மீது மீண்டும் அன்னார் (ரலி) துணியை போட்டு விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சஹாபிகள் அமர்ந்திருந்த அந்த இடத்தை நோக்கி வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களோ

சஹாபிகளிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடையவில்லை. மாறாக, உயிருடன் உள்ளார்கள் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்திற்கு வருகை தந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், நீங்கள் சற்று மௌனமாக இருங்கள் என்று கூறினார்கள். ஆனால் அவர்கள் அன்னாரின் கூற்றை ஏற்கவில்லை. மேலும் தமது விஷயத்தை கூறிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு பக்கமாக சென்று, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையில் மரணமடைந்து விட்டார்கள் என்று மக்களிடம் கூறத் தொடங்கினார்கள். அப்போது சஹாபிகள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை விட்டு விட்டு அன்னார் (ரலி) அவர்களை சுற்றி ஒன்றுகூடினார்கள். இறுதியில் அன்னார் (ரலி) அவர்களின் கூற்றை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் செவிமடுக்க நேரிட்டது.

அன்னார் (ரலி) அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஏற்கனவே இது பற்றி கூறப்பட்டுள்ளது.

’’وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ
قَبْلِهِ الرُّسُلُ ؕ اَفَاِئِنْ مَّاتَ اَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلٰٓى اَعْقَابِكُمْ ؕ
وَمَنْ يَّنْقَلِبْ عَلٰى عَقِبَيْهِ فَلَنْ يَّضُرَّ اللّٰهَ شَيْـًٔا ؕ
وَسَيَجْزِى اللّٰهُ الشّٰكِرِيْنَ۔ يَاَيُّهَا النَّاسُ
مَنْ كَانَ يَعْبُدُ مُحَمَّدًا فَاِنَّ مُحَمَّدًا قَدْ مَاتَ وَمَنْ
كَانَ يَعْبُدُ اللّٰهَ فَاِنَّ اللّٰهَ حَيٌّ لَا يَمُوْتُ

பொருள்: முஹம்மது (ஸல்) அவர்களும் ஒரு தூதர் ஆவார்கள். அன்னார் (ஸல்) அவர்களுக்கு முன் தோன்றிய அனைத்து நபிமார்களும் மரணமடைந்து விட்டார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டாலோ அல்லது கொலை செய்யப்பட்டாலோ நீங்கள் உங்கள் குதி கால்களில் ஓடி விடுவீர்களோ?

நீங்களும் மரணமடைந்து விடுவீர்கள். இந்த மக்களும் மரணமடைந்து விடுவார்கள். மக்களே! உங்களில் எவர் முஹம்மது (ஸல்) அவர்களை வணங்கி வந்தாரோ அவர் கேட்டுக் கொள்ளட்டும். முஹம்மது (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள். எவர்களெல்லாம் அல்லாஹ்வை வணங்கி வந்தார்களோ அவர்கள் அறிந்து கொள்ளட்டும். அல்லாஹ் உயிருள்ளவன் ஆவான். அவன் மரணிப்பதில்லை.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மேற்குறிப்பிட்ட இரண்டு வசனங்களை ஓதி மக்களுக்கு, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்று கூறியபோது சஹாபிகளுக்கு உண்மை வெளிப்பட்டது. அவர்கள் தன்னையும் அறியாமல் அழத் தொடங்கினர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுயமே இவ்வாறு கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் வசனங்களைக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நிரூபணம் செய்தபோது எனக்கு இந்த விஷயம் தெரிய வந்தது. அதாவது ஒரு வகையில் இந்த இரண்டு வசனங்களும் அன்று இறங்கியது போன்றே எனக்கு தோன்றியது. எனது மூட்டுகளுக்கு எனது தலையை தாங்குவதற்கு ஆற்றல் இருக்கவில்லை. மேலும் எனது பாதங்கள் தடுமாறின. நான் மிகக் கடுமையான துக்கத்தின் காரணமாக என்னையும் அறியாமல் பூமியில் விழுந்து விட்டேன்.

(தஃவத்துல் அமீர், அன்வாருல் உலூம், தொகுதி 7 பக்கம் 345 – 347)

இந்த அடிப்படையில் முஸ்லிம்களின் முதல் இஜ்மா எனும் ஒருமித்த கருத்து குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு முன்பு தோன்றிய அனைத்து நபிமார்களும் (அவர்களில் மஸீஹூம் அடங்குவார்). மரணமடைந்து விட்டனர். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின்போது முஸ்லிம்கள் பதற்றமடைந்தனர். இந்த துன்பம் அவர்களுக்கு தாங்கிக் கொள்ள முடியாத துன்பமாக இருந்தது. அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பதற்றத்தில் வாளை உருவி விட்டார்கள். மேலும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இறந்து விட்டதாக யாராவது கூறினால் நான் அவரது தலையை சீவி விடுவேன் என்று கூறினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணமடையவில்லை. மாறாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் போன்று இறைவனை சந்திப்பதற்காக சென்றுள்ளார்கள். மீண்டும் திரும்பி வந்து விடுவார்கள். மேலும் நயவஞ்சகர்களை அழிப்பார்கள். பின்னர் மரணிப்பார்கள் என்று அன்னார் கூறினார்கள்.

ஆக நயவஞ்சகர்கள் அழிந்து விடாத வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணிக்க முடியாது என்பது அன்னாரின் கொள்கையாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் வரை நயவஞ்சகர்கள் இருந்நதனர். எனவே அன்னார் (ஸல்) அவர்கள் மரணிக்கவில்லை என்று அன்னார் (ரலி) கருதிக் கொண்டார்கள். அந்த நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு அருகில் இருந்த ஒரு கிராமத்திற்கு சென்றிருந்தார்கள். அப்போது திரும்பி வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டிற்கு சென்றார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய உடலைப் பார்த்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் உண்மையிலேயே மரணித்து விட்டார்களா? என்பதை கண்டார்கள். பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் திரும்பி வெளியே வந்தார்கள். மேலும் அல்லாஹ் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு இரண்டு மரணங்களை தர மாட்டான் என்று கூறியவாறு வெளியே வந்தார்கள். அதாவது பௌதீக மரணம் என்பது ஒரு மரணமாகும். மற்றொரு மரணம் என்பது ஆன்மீக மரணம் ஆகும். அதாவது அன்னார் (ஸல்) அவர்களின் மரணத்துடனேயே முஸ்லிம்கள் சீர்கெட்டு விடுவதாகும்.

பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் நேரடியாக சஹாபிகளின் கூட்டத்திற்கு சென்றார்கள். மேலும் மக்களிடம் கூறினார்கள்: நான் கொஞ்சம் பேச விரும்புகின்றேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வாளை ஏந்திக் கொண்டு நின்றார்கள். யாராவது இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் இறந்து விட்டதாக அறிவிப்பு செய்தால் நான் அவரை கொலை செய்து விடுவேன் என்ற எண்ணத்தில் நின்று கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் மக்களிடம் அன்னார் (ரலி) அதே விஷயத்தை பேசினார்கள். அன்னார் (ரலி) கூறினார்கள்:

مَنْ كَانَ مِنْكُمْ يَعْبُدُ مُحَمَّدًا فَإِنَّ مُحَمَّدًا
قَدْ مَاتَ، وَمَنْ كَانَ مِنْكُمْ يَعْبُدُ اللّٰهَ فَإِنَّ اللّٰهَ حَيٌّ لَا يَمُوْتُ

உங்களில் எவர் முஹம்மது (ஸல்) அவர்களை வணங்கி வந்தாரோ அவர் அறிந்து கொள்ளட்டும் முஹம்மது (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள். எவர் அல்லாஹ்வை வணங்கி வருகின்றாரோ அவர் மகிழ்ச்சி அடையட்டும். அல்லாஹ் உயிருள்ளவன் ஆவான். அவன் ஒருபோதும் மரணிப்பதில்லை.

பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று இந்த இறைவசனத்தை ஓதினார்கள்:

وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ
اَفَائِنْ مَّاتَ اَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلٰٓى اَعْقَابِكُمْ

பொருள்: முஹம்மது (ஸல்) அவர்கள் இறைத்தூதராக இருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்களுக்கு முன் தோன்றிய அனைத்து தூதர்களும் மரணமடைந்து விட்டார்கள். அவ்வாறிருக்க அன்னார் (ஸல்) அவர்கள் எவ்வாறு மரணமடையாமல் இருக்க முடியும். அன்னார் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டாலோ அல்லது கொலை செய்யப்பட்டாலோ நீங்கள் உங்கள் குதி கால்களில் ஓடி விடுவீர்களா? மேலும் இஸ்லாத்தை விட்டு விடுவீர்களா?

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: திருக்குர்ஆனின் இந்த வசனத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஓதியபோது எனது கண்கள் திறந்து விட்டன. மேலும் தற்போது தான் இந்த வசனம் இறங்கியது போன்று என்று எனக்கு தோன்றியது. மேலும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதும் எனக்கு வெளிப்பட்டு விட்டது. மேலும் எனது கால்கள் நடுநடுங்கின. மேலும் நான் நிலத்தில் விழுந்து விட்டேன்.

இவ்வாறு எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: சஹாபிகளின் ஒரே இஜ்மா இது மட்டுமே ஆகும். அந்த நேரத்தில் அனைத்து சஹாபிகளும் இருந்தனர். உண்மையில் அதற்கு முன்பு ஒருபோதும் முஸ்லிம்களுக்கு அதுபோன்ற நிலைமை வரவில்லை. பின்னர் ஒருபோதும் முஸ்லிம்கள் அதுபோன்று ஒன்று கூடவில்லை. அந்த கூட்டத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த வசனத்தை ஓதினார்கள். முஹம்மது (ஸல்) அவர்கள் ஒரு தூதரே அன்றி வேறில்லை. அன்னாருக்கு முன் தோன்றிய தூதர்கள் அனைவரும் மரணமடைந்து விட்டனர். எனவே அன்னார் (ஸல்) மரணமடைவதும் எந்த ஆச்சரியத்திற்கும் உரிய விஷயமல்ல. அனைத்து சஹாபிகளும் அன்னாரின் கருத்துடன் உடன்பட்டனர்.

(மஸ்லா வஹீ வ நுபுவ்வத் கே முதஅலிக் இஸ்லாமி நஸரிய்யா, அன்வாருல் உலூம் தொகுதி 23 பக்கம் 327, 328)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சான்று தொடர்பாக இதே விஷயத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த சமுதாயத்தின் மீது செய்த மாபெரும் நன்மை என்னவென்றால், அதற்கு நம்மால் நன்றி செலுத்த முடியாது. அன்னார் (ரலி) அவர்கள் முந்தைய கால நபிமார்கள் அனைவரும் மரணமடைந்து விட்டனர் என்று கூறும் இந்த வசனத்தை நபவி பள்ளிவாசலில் ஒன்றுகூடியிருந்த அனைத்து சஹாபிகளுக்கும் ஓதிக் காட்டாமல் இருந்திருந்தால் பின்னர் இந்த சமுதாயம் அழிந்து போயிருக்கும். ஏனென்றால் அதுபோன்ற நிலையில் இக்காலத்தின் குழப்பவாதிகளான ஆலிம்கள் இவ்வாறே கூறியிருப்பார்கள். அதாவது

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 07 April 2022 Issue No. 14

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் உள்ளார்கள் என்பதே சஹாபிகளின் கொள்கையாக இருந்தது என்று கூறியிருப்பார்கள். ஆனால் தற்போது கூறப்பட்ட வசனத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எடுத்து வைத்ததன் மூலமாக அனைத்து நபிமார்களும் மரணமடைந்து விட்டார்கள் என்ற விஷயத்தில் அனைத்து சஹாபிகளின் இஜ்மா எனும் ஒன்றுபட்ட கருத்து ஏற்பட்டிருந்தது என்பது வெளிப்பட்டு விட்டது.

இன்னும் கூறப்போனால், இந்த இஜ்மா பற்றி கவிதைகளும் உருவாக்கப்பட்டன. அபூபக்ரின் ஆன்மாவின் மீது இறைவன் ஆயிரக்கணக்கான கருணைகளை மழைபோல் பொழிவானாக. அவர் அனைத்து ஆன்மாக்களையும் அழிவிலிருந்து காப்பாற்றி விட்டார். இந்த இஜ்மாவில் அனைத்து சஹாபிகளும் பங்கு பெற்றிருந்தனர். ஒரு நபர் கூட அவர்களிலிருந்து வெளியில் இருக்கவில்லை. இது சஹாபா பெருமக்களின் முதல் இஜ்மாவாக இருந்தது. மிகவும் நன்றி பாராட்ட வேண்டிய நடவடிக்கையாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நடவடிக்கை இருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு இடையில் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஒப்புமை உள்ளது. அது என்னவென்றால், அவர்கள் இருவரைக் குறித்தும் இறைவனின் வாக்குறுதி திருக்குர்ஆனில் உள்ளது. அதாவது ஓர் அச்சத்தின் நிலை இஸ்லாத்தில் உருவானபோது மேலும் ஜமாஅத் முர்தத் ஆக தொடங்கியபோது அவர் வெளிப்படுவார். எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் நேரத்தில் அவ்வாறே நிகழ்ந்தது. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு நூற்றுக்கணக்கான அறிவீனர்கள், அரபு கோத்திரங்கள் முர்தத் ஆகி விட்டன. தொழுகைகள் நடைபெற்று வந்த பள்ளிவாசல்களில் இரண்டே பள்ளிவாசல்கள் தான் எஞ்சியிருந்தன. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீண்டும் அவர்களை இஸ்லாத்தில் நிலை நிறுத்தினார்கள். அதுபோன்று வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் பல லட்சம் மக்கள் முர்தத் ஆகி கிறிஸ்தவர்களாக மாறி விட்டனர். இந்த இரண்டு நிலைகளும் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளன. அதாவது முன்னறிவிப்பாக அவை கூறப்பட்டுள்ளன.

(ஸமீமா பராஹீனே அஹ்மதிய்யா, தொகுதி 5, ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 385, 386)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் பற்றி அறிவிப்பில் வருகின்றது. இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணத்தைப் பற்றிய செய்தி சஹாபா பெருமக்களுக்கு தெரிய வந்தபோது ஸகிஃபா பனூ சாயிதா என்ற இடத்தில் அன்ஸார் சகோதரர்கள் ஒன்றுகூடினர். இந்த கூட்டத்தில் கிலாஃபத் விவகாரம் பற்றி பேசப்பட்டது. ஹஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவர் சஅத் பின் உதாபா அவர்களை சுற்றி அன்ஸார் சஹாபிகள் ஒன்றுகூடினார்கள்.

(ஸலாபி அவர்கள் எழுதிய ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) ஷக்ஸியத் அவ்ர் கார்நாமே என்ற நூல் பக்கம் 174)

அந்த நாட்களில் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் நோயுற்றிருந்தார்கள். அன்ஸார் சஹாபிகளின் தியாகங்கள் மற்றும் இஸ்லாத்திற்கு ஆற்றிய தொண்டுகளை விரிவாக குறிப்பிட்டவாறு கிலாஃபத்திற்கு உரிமை படைத்தவர்களாக அன்ஸார் சஹாபிகளை அன்னார் குறிப்பிட்டார்கள். ஆனால் அன்ஸார் சகோதரர்கள் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்களையே கிலாஃபத்திற்கு பொருத்தமானவர்களாக குறிப்பிட்டார்கள். ஆயினும் அற்போது அன்ஸார் சகோதரர்கள் பைஅத் கூட செய்திருக்கவில்லை. அதற்குள் அவர்களில் ஒருவர் முஹாஜிர்கள் தங்களின் கிலாஃபத்தை ஒப்புக் கொள்ளவில்லை என்றால் என்ன நடக்கும்? என்று கேட்டார். அதற்கு ஒருவர் இந்த ஆலோசனையை வழங்கினார். அதாவது அந்நிலையில் அன்ஸார் சகோதரர்களில் இருந்து ஒருவரும், முஹாஜிர்களிலிருந்து ஒருவரும் கலீஃபாவாக இருக்கட்டும். ஆனால் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் அதனை பனூ அவ்ஸ் கோத்திரத்தின் பலவீனம் என்று குறிப்பிட்டார்கள்.

அன்ஸார் சஹாபிகள் சகீஃபா பனூ சாயிதா என்ற இடத்தில் கிலாஃபத் தொடர்பாக விவாதித்துக் கொண்டிருந்தபோது ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி), ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜராஹ் மற்றும் ஏனைய பெரும் பெரும் சஹாபா பெருமக்கள் மஸ்ஜிது நபவியில் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மறைவிற்கான மாபெரும் சம்பவத்தை குறிப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அஹ்லே பைத் அன்னாரின் நல்லடக்கத்திற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக இருந்தார்கள். எவருக்கும் கிலாஃபத்தைக் குறித்த நினைவு இருக்கவில்லை. அன்ஸார் சகோதரர்கள் இந்த விவகாரம் குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்காக ஒன்றுகூடியிருந்தார்கள். மேலும் அவர்களில் ஒருவரை அமீராக்க விரும்புகின்றார்கள் போன்ற விஷயங்களை முற்றிலும் அறியாதவர்களாக இருந்தனர்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) என்ற நூல் பக்கம் 85, 86 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

தப்காத்தே குப்ரா எனும் நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜராஹ் (ரலி) அவர்களிடத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்தார்கள். மேலும் தங்களது கரத்தை நீட்டுங்கள். நான் தங்களிடத்தில் பைஅத் செய்கின்றேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய நாவினால் அன்னார் (ரலி) அவர்களை இந்த சமுதாயத்தின் அமீன் நம்பிக்கைக்குரியவர் என்று கூறி இருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். தாங்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டதிலிருந்து இதுவரை தங்களிடத்தில் இதற்கு முன்னர் இதுபோன்ற கவனக்குறைவை நான் ஒருபோதும் கண்டதில்லை. உங்களிடம் சித்தீக் மற்றும் சானி இஸ்னைன் இருக்கின்றார். அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உள்ளார்கள் என்று கூறினார்கள். அவ்வாறிருக்க நீங்கள் என்னிடம் பைஅத் செய்வீர்களா?

(அத்தபகாத்துல குப்ரா தொகுதி 3 பக்கம் 135 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதே உரையாடலுக்கு இடையில் அன்ஸார் சஹாபிகளின் கூட்டத்தைக் குறித்து அன்னாருக்கு தகவல் கிடைத்தது. அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு உடனடியாக ஒரு அவசர பணி உள்ளது என்ற தூதுச் செய்தியை அனுப்பி வைத்து அழைத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நல்லடக்க பணிகளின் மும்முரமாக இருப்பதன் காரணிகளைக் கூறி வெளியில் வருவதற்கு மறுத்து விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீண்டும் தூதுச் செய்தியை அனுப்பினார்கள். ஒரு அவசர விஷயம் நிகழ்ந்துள்ளது. அங்கு தாங்கள் இருப்பது அவசியமாகும் என்று செய்தி அனுப்பப்பட்டது. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெளியே வருகை தந்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கேட்டறிந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லடக்க பணிகளைத் தவிர தற்போது அப்படி என்ன முக்கிய பணி உள்ளது? எதற்காக நீங்கள் என்னை அழைத்தீர்கள்? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அன்ஸார் சஹாபிகள் சகீஃபா பனூ சாயிதா என்ற இடத்தில் ஒன்றுகூடியுள்ளனர். ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்களை கலீஃபாவாக ஆக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டு வருகின்றனர். அவர்களில் ஒருவர் இவ்வாறு கூறியுள்ளார்: அதாவது எங்களில் ஒருவர் அமீராக இருக்கட்டும். குரைஷிகளில் ஒருவர் மற்றொரு அமீராக இருக்கட்டும். இதைக்கேட்ட உடனேயே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) ஆகியோருடன் பனூ சகீஃபா பனூ சாயிதா என்ற இடத்தை சென்றடைந்தார்கள். அங்கு தற்போது விவாதம் நடைபெற்று வந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) ஆகியோர் அவர்களுக்கு மத்தியில் சென்று அமர்ந்து கொண்டார்கள்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) என்ற நூல் பக்கம் 86, 87 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

(தொடர்ச்சி... அடுத்த இதழில்)

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad